விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 143 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 27 வெள்ளிக்கிழமை (10.05.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## செப்.17 – ஒக். 16க்கு இடையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்

### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதிக்கும் இடையிலான காலப்பகுதிக்குள் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று அறிவித்துள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் நளினி



(கிளிநொச்சி)

ராஜிவ்காந்தி கொலை வழக்கில் விடுதலையான நளினி, கிளிநொச்சியை வந்தடைந்தார்.

நளினியின் கணவரான முருகன், கிளிநொச்சி, பளைப் பகுதியில் 15

## உக்ரைன் - ரஷ்யா போரில் 6 இலங்கையர்கள் பலி

(கொழும்பு)

மனித கடத்தல்காரர்களால் உக்ரேன் - ரஷ்ய யுத்தத்தில் ரஷ்ய இராணுவத்துடன் இணைந்து கொள்வதற்காக இந்நாட்டிலிருந்து அனுப்பப்பட்ட இலங்கையர்கள் 6 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இது உறுதிப்படுத்தப் 15

## தீக்காயத்துக்குள்ளான இளம் யுவதி மரணம்

### வல்வெட்டித்துறையில் சம்பவம்

(கரணவாய்)

தீக்காயத்துக்குள்ளான இளம் யுவதி ஒருவர் மரணமடைந்துள்ளார்.

வல்வெட்டித்துறை தீருவில் குடியேற்றத் திட்டத்தில் நேற்று முன்தினம் புதன் 15

## நரகத்தில் வீழ்ந்த நாட்டை மீட்டேன்

### பாராளுமன்றில் ஜனாதிபதி விசேட உரை



(கொழும்பு)

"நரகத்தில் வீழ்ந்த நாட்டை மீட்க முடியும்" என்ற நம்பிக்கை தமக்கு இருந்ததாலேயே ஆட்சியை கைப்பற்றியதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## 24 இலட்சம் குடும்பங்களுக்கு மாதம் 10 கிலோ இலவச அரிசி

(கொழும்பு)

இலங்கையிலுள்ள 24 இலட்சம் குடும்பங்களுக்கு மாதாந்தம் 10 கிலோகிராம் 15

## அதிகளவு வெப்பம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### புன்னாலைக்கட்டுவனில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

அதிகளவு வெப்பத்தால் புன்னாலைக்கட்டுவனில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் புன்னாலைக் கட்டுவன் பகுதியைச் சேர்ந்த 45 வயதான 15

## ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் அபிவிருத்திகளை நிறைவு செய்க

### தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதியின் செயலாளருக்குக் கடிதம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நிறைவு செய்யுமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவுக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளதாக தேர்தல் 15

## சம்பள அதிகரிப்புக்கு வருமானம் இல்லை

### சபையில் ரணில்

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளம் தொடர்பில் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டாலும் அவற்றை பரிசீலிக்க இவ்வருடத்தில் அரசாங்கத்திடம் போதிய வருமானம் இல்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 15

## பாராளுமன்றை கலையுங்கள்

### பசில் கோரிக்கை ரணில் நிராகரிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் கலைத்துப் பொதுத்தேர்தலுக்குச் செல்லுமாறு ஸ்ரீ லங்கா பொதுஜன 15

## கந்தர்மடம் மணல்தறையில் வீடு ஒன்று முற்றுகை

### இரு பெண்கள், இரு ஆண்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் மணல்தறை வீதிப் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான வீடு ஒன்று முற்றுகையிடப்பட்டதோடு இரு பெண்கள் உட்பட நால்வர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்வேலி, பருத்தித்துறைப் பகுதி 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலணை வரலாற்று அறிமுகம் நூல் வெளியீட்டு விழா நாளை

(யாழ்ப்பாணம்)

வேலணை ஒரு வரலாற்று அறிமுகம் எனும் நூலின் இரண்டாம் பதிப்பின் வெளியீட்டு விழாவும் நூலாசிரியர் அமரர் ச.மாணிக்கவாசகர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வும் நாளை 11 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் வாழ்நாள் பேரா சிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் ஓய்வு நிலை அதிபர் பொ.நடராசா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ம)

## பேராசிரியர் வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

### நாளைய நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் சு.வித்தியானந்தன் அறக்கட்டளை மற்றும் யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரி தமிழ் மன்றம் இணைந்து நடத்தும் பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா நிகழ்வு நாளையும் நாளை மறுதினமும் யாழ். கல்வியியல் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நாளைய நிகழ்வுகள் பிற்பகல் 2 மணிக்கு வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் யாழ்.பல்லைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் பிரதம விருந்தினராகவும் வைத்திய நிபுணர் சி.ரகுராம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் ஆசியுரையை கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் வாழ்த்துரையை பேராசிரியர் என்.சண்முகலிங்கன், கல்வியியல் கல்லூரி பீடாதிபதி தி.ஜெயக்காண்டீபன் ஆகியோர் நிகழ்த்த, தொடக்கவுரையை பேராசிரியர் கி.விசாகரூபன் நிகழ்த்துவார்.

தொடர்ந்து நூற்றாண்டு மலர் வெளியீடு இடம்பெறும். முதற் பிரதியை யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் ம.பிரதீபன் பெற்றுக் கொள்வார்.

தொடர்ந்து இராவணேசன் கூத்து அளிக்கை இடம்பெறும். (ம)

## தேசிய ஆசிரியர் பேரவையை நிறுவ அமைச்சரவை அனுமதி

தேசிய ஆசிரியர் பேரவையை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தொடர் தொழில் அபிவிருத்தி மூலம் ஆசிரியர்களின் தொழில்வாண்மை மற்றும் தரப்பண்புகளை அதிகரிப்பதற்காக ஏனைய தொழில் சேவைப் பிரிவுகள் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு இணையாக தேசிய ஆசிரியர் பேரவையை நிறுவுவதற்கு தேசிய கல்விக் கொள்கைச் சட்டகத்தில் முன்மொழியப்பட்டுள்ளது.

அதற்கமைய, கல்வித் துறைசார் பங்காளர்களுடனான நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் தயாரிக்கப்பட்டுள்ள அடிப்படைச் சட்டவரைபின் பிரகாரம் தேசிய ஆசிரியர் பேரவையை நிறுவுவதற்கு சட்டவரைபொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி மற்றும் கல்வி அமைச்சர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ம-7,10)

## நாட்டின் பிரஜை அல்லாதவர் தேர்தலில் போட்டியிட முடியாது

### மகிந்த தேசப் பிரிய

(கொழும்பு)

நாட்டின் பிரஜை அல்லாத ஒருவர் எந்த தேர்தலிலும் போட்டியிட முடியாது என தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் மகிந்த தேசப் பிரிய தெரிவித்துள்ளார்.

மேலும் பிரஜைகள் அல்லாதவர்கள் அரசியல் கட்சியொன்றை பதிவு செய்வதற்கு சட்டரீதியாக எந்த தடையும் இல்லை என தேர்தல்கள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் பிரஜை அல்லாத ஒருவர் தேர்தலில் போட்டியிடுவதை மட்டுமே இலங்கைச் சட்டம் தடுப்பதாகவும் மகிந்த தேசப் பிரிய மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7,10)


பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் கல்யாண மாலை

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-

கல்யாண மாலை

இல.03, 2ம் ஒழுங்கை பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email : kalyanamalai.jaffna@gmail.com



## கண்ணீர் அஞ்சலி



பாரதி வீதி பத்தமேனி, அச்சுவேலியை வசிப்பிடமாகக் கொண்ட

அமரர் திருமதி **தம்பிராசா பகவதி**

மண்ணில் 22.05.1940 விண்ணில் 06.05.2024



சுன்னாகத்தை பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கு, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர் திரு. **கதிர்காமு பாலசுந்தரம்**

மண்ணில் 05.04.1950 விண்ணில் 04.05.2024



நீதிமன்ற வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாக கொண்ட

அமரர் **திருமதி மயில்வாகனம் செல்வராணி**

மண்ணில் 22.01.1949 விண்ணில் 06.05.2024

எமது சங்கத்தில் கள.பொறுப்பாளராக பணிபுரியும் தி.க.கோகிலராசசிங்கம் அவர்களின் பாசமிகு மாமியார் அமரர்.திருமதி.தம்பிராசா பகவதி அவர்கள் 06.05.2024ம் திகதியும், கள.முகாமையாளராக பணிபுரியும் திரு.இ.தயாளன் அவர்களின் பாசமிகு மாமனார் அமரர் திரு.கதிர்காமு பாலசுந்தரம் அவர்கள் 04.05.2024 ம் திகதியும், மற்றும் மல்லாகம் சன்மார்க்க முன்பள்ளி ஆசிரியர் செல்வி.ம.வசந்தி அவர்களின் பாசமிகு தாயார் அமரர் திருமதி.மயில்வாகனம் செல்வராணி அவர்கள் 06.05.2024ம் திகதியிலும் மரணமடைந்துள்ளனர்.

இவர்களின் குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும் : அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ. சங்கம்

(C-0325)

## ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையில் ஆட்சேர்ப்பு செய்தல் தொடர்பான பிரயோகப் பரீட்சை எதிர்வரும் 13.05.2024, 14.05.2024, 15.05.2024 ஆம் திகதிகளில் கிளிநொச்சி முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகு மற்றும் திறன் விருத்தி நிலையம், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

இப்பிரயோகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் அவர்களது முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும், தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரங்களை வட மாகாண சபை இணையத்தளம் www.np.gpv.lk மற்றும் வட மாகாண கல்வி அமைச்சின் இணையத்தளம் www.edumin.np.gov.lk எனும் முகவரிகளில் பார்வையிட முடியும் எனவும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ம-7,10)


லங்கா மஹால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

0091956615671 9

MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.

077 839 3974


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைப்பாலையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நூற்றுக்கு மேற்பட்ட மரக்குற்றிகள் மீட்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக் குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரணைப்பாலை பகுதியில் தனியார் காணி ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பல இலட்சம் பெறுமதியான நூற்றுக்கும் மேற்பட்ட முதிரை மரக்குற்றிகள் முல் லைத்தீவு பொலிஸாரால் நேற்று முன் தினம் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் விசாரணை களின் பின்னர் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இவ்வாறு இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை கட் டுப்படுத்த அரச அதிகாரிகள் உடனடி யாக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் சமூக ஆர்வலர் கள் தெரிவித்து வருகின்றமை குறிப்பிட த்தக்கது. (நி-299)

# சாவகச்சேரிப் பகுதியில் சோதனை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குழிப் பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை காலை யுக்திய சோதனை நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டது.

இதன்போது பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து ஏ-9 மற்றும் ஏ-32 வீதிகளூடாக பய ணித்த வாகனங்களை சோதனையி ட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸ்மா அதிபர் தேசப்பந்து தென் னக்கோன் அவர்களது ஆலோசனைக்கு அமைவாக போதைப்பொருளை கட்டுப் படுத்தும் நோக்குடன் நாடளாவிய ரீதியில் யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிட த்தக்கது. (நி-33)


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அட்ஷய திருதியை நல்வாழ்த்துக்கள்

செல்வம் பொங்கிடும் அட்ஷய திருதியை நன்னாளில் சகல சௌபாக்கியங்களும் பெற்று தரும் விசேஷ தினத்தில் எங்களுடன் கொண்டாட பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களை அகமகிழ்வுடன் அழைக்கின்றோம்.

மயூரன்ஸ் நகைமாளிகை



அட்ஷய திருதியை தினமாகிய இன்று (10.05.2024) சிறப்பு விலைக் கழிவுகளும் பெறுமதிமிக்க பரிசில்களும் உங்களுக்காக காத்திருக்கின்றன என்பதை அறியத் தருவதையிட்டு அக மகிழ்கிறோம்.




(நி-0322)

இல.07, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 222 3015, 077 651 0251.



செல்வம் பொங்கிடும் அட்ஷய திருதியை நன்னாளில் சகல செல்வங்களும் பெற்றிட பிரார்த்திப்போம்

செல்வத்தை பெருக்கி சௌபாக்கியத்தை வரமாக்கும் அட்ஷய திருதியை எனும் நன்நாளைக் கொண்டாட உங்களை அன்போடு அழைக்கின்றது.

ஸ்ரீ குமரன் நகை மாளிகை

Sree Kumaran Jewellers

அட்ஷய திருதியை தினமான இன்று (10.05.2024) கொள்வனவு செய்யும் தங்க நகைகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும் என்பதனை மிகுந்த மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

இல. 74, பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

021 226 4465
077 873 3482

எம்மிடம் கொள்வனவு செய்யும் தங்க நகைகளுக்கு டிஜிட்டல் முறையில் துல்லியமாக தரம் பார்த்து தரச் சான்றிதழ் வழங்கப்படும்.








(c-0320)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹோலி 'சூறாவளி'

## • வெற்றிப் பாதையில் வேரூன்றியது பெங்களூரு
## • பிளே ஓப்பில் இருந்து விடைபெற்றது பஞ்சாப் கிங்ஸ்



கிங் ஹோலி 92 ஓட்டங்கள் விளாச, பெங்களூரு அணி 60 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

தர்மசாலாவில் நேற்று நடந்த ஐ.பி.எல்., லீக் போட்டியில் பஞ்சாப், பெங்களூரு அணிகள் மோதின.

பஞ்சாப் "லெவன்" அணியில் ரபாடாவுக்கு பதிலாக லிவிங்ஸ்டோன் இடம்பிடித்தார். பெங்களூரு அணியில் மக்ஸ்வெல் நீக்கப்பட்டு பெர்குசன் சேர்க்கப்பட்டார்.

நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணியின் தலைவர் சாம் கர்ரான் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

**டுபிளசி ஏமாற்றம்**

பெங்களூரு அணிக்கு விராட் ஹோலி - அணித் தலைவர் டுபிளசி ஜோடி சுமாரான ஆரம்பம் வழங்கியது. வித்வத் கவேரப்பா வீசிய முதல் ஓவரில் 2 பவுண்டரி அடித்த டுபிளசி (9) நிலைக்கவில்லை. சாம் கர்ரான் வீசிய 4 வது ஓவரில் வரிசையாக ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் அடித்த வில் ஜாக்ஸ் (12), கவேரப்பாவிடம் சரணடைந்தார்.

**பலே படிதர்**

சாம் கர்ரான் பந்தை சிக்சருக்கு அனுப்பிய ரஜத் படிதர், 21 பந்தில் அரைச்சதம் கடந்தார். படிதர், 23 பந்துகளில் 55 ஓட்டங்கள் (6 சிக்சர், 3 பவுணடரி) எடுத்து நம்பிக்கை கொடுத்தார்.

**ஹோலி விளாசல்**

பெங்களூரு அணி 10 ஓவர்களில் 119/3 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மழையால் போட்டி சிறிது நேரம் பாதிக்கப்பட்டது. மழை நின்ற பின் லிவிங்ஸ்டோன் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ஹோலி அரைச்சதம் கடந்தார். தொடர்ந்து அசத்திய ஹோலி, சாம் கர்ரான் வீசிய 16வது ஓவரில் 2 சிக்சர் பறக்கவிட்டார். கிரீன், ஹர்ஷல் படேல் வீசிய 17ஆவது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசினார். நான்காவது விக்கெட்டுக்காக 92 ஓட்டங்கள் சேர்த்த போது அர்ஷ்தீப் சிங் "வேகத்தில்" ஹோலி (92 ஓட்டங்கள், 6 சிக்சர், 7 பவுண்டரி) வெளியேறினார்.

ஹர்ஷல் படேல் வீசிய கடைசி ஓவரில் தினேஷ் கார்த்திக் (18), லாம்ரர் (0), கிரீன் (46) ஆட்டமிழந்தனர்.

20 ஓவர்களில் பெங்களூரு அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 241 ஓட்டங்களை எடுத்தது.

**ரூசோவ் ஆறுதல்**

பஞ்சாப் அணிக்கு பிரப்சிம்ரன் (6), பேர்ஸ்டோவ் (27) ஜோடி சுமார் ஆரம்பம் கொடுத்தது. வேகமாக ஓட்டங்கள் சேர்த்த ரூசோவ், 27 பந்தில் 61 ரன் எடுத்தார். சஷாங்க் (37), ஜிதேஷ் (5), கர்ரான் (22), அஷுதோஷ் (8) நிலைக்கவில்லை. 17 ஓவரில் 181 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது பஞ்சாப் அணியின் "பிளே ஓப்" வாய்ப்பு முடிவுக்கு வந்தது. (7,10)

# இலங்கை அணியில் பத்திரன

## உலக அணி அறிவிப்பு



"ரி20" உலகக் கிண்ணத் தொடருக்கான இலங்கை அணியில் பத்திரன இடம் பிடித்துள்ளார்.

மே.தீவுகள், அமெரிக்காவில் ஐ.சி.சி., "ரி20" உலகக்கிண்ணத் தொடர் (ஜூன் 2-29) நடக்கவுள்ளது.

மொத்தம் 20 அணிகள் பங்கேற் கின்றன. இலங்கை அணி "டி" பிரிவில் தென்னாபிரிக்கா, பங்களாதேஷ், நெதர்லாந்து, நேபாள அணிகளுடன் இடம்பெற்றுள்ளது. இதற்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டது.

தொடையின் பின்பகுதி காயத்தால் ஐ.பி.எல். தொடரில், சென்னை அணியில் இருந்து பாதியில் விலகிய வேகப்பந்துவீச்சாளர் பத்திரன (வயது-21), தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதேபோல ஐ.பி.எல்., மும்பை அணியில் இருந்து காயத்தால் விலகிய இடது கை வேகப்பந்துவீச்சாளர் டில்ஷன் மதுஷங்காவுக்கும் இடம் கிடைத்துள்ளது.

அணித் தலைவராக ஹசரங்க, துணைத் தலைவராக சரித் அசலங்க அறிவிக்கப்பட்டனர். சீனியர் வீரர் மத்யூசும் தேர்வானார்.

**இலங்கை அணி விபரம்:**

ஹசரங்க (அணித் தலைவர்), சரித் அசலங்க (துணைத் தலைவர்), குசல் மெண்டிஸ், பதும் நிசங்க, கமிந்து மெண்டிஸ், சதீரா சமரவிக்ரம, மத்யூஸ், தசுன் ஷனகா, தனஞ்செய டி சில்வா, மகேஷ் தீக்ஷனா, துனித் வெல்லாலகே, துஷ்மந்த் சமீரா, நுவன் துஷாரா, பத்திரன, டில்ஷன் மதுஷங்க.

**மாற்று வீரர்கள்:** அசிதா பெர்ணான்டோ, விஜயகாந்த் வியாஸ்காந்த், பானுகா ராஜபக்ஷ, ஜனித் லியனகே.

# 12 ஓட்டங்களுக்கு சுருண்டது மங்கோலிய தேசம்

## ஜப்பான் அசத்தல் வெற்றி



ஜப்பானுக்கு எதிரான "ரி20" போட்டியில் ஏமாற்றிய மங்கோலிய அணி 12 ஓட்டங்களுக்கு சுருண்டது.

ஜப்பான் சென்றுள்ள மங்கோலிய அணி, அங்கு ஏழு போட்டிகள் கொண்ட "ரி20" தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் ஜப்பான் வென்றது. சனோவில் 2வது போட்டி நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஜப்பான் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் சபோரிஷ் ரவிச்சந்திரன் 69 ஓட்டங்களை விளாசினார்.

சவாலான இலக்கை விரட்டிய மங்கோலிய அணி 8.2 ஓவர்களில் 12 ஓட்டங்களுக்கு சுருண்டு, 205 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் மங்கோலியா சார்பில் துர் சும்ரா அதிகபட்சமாக 4 ஓட்டங்கள் எடுத்தார். ஆறு பேர் "டக்-அவுட்" ஆகினர். ஜப்பான் சார்பில் "வேகத்தில்" மிரட்டிய கசுமா கடோ-ஸ்டாபோர்டு 5 விக்கெட் சாய்த்தார்.

இதன் மூலம் சர்வதேச "ரி20" அரங்கில் ஒரு இன்னிங்சில் குறைந்த ஓட்ட எண்ணிக்கையை பதிவு செய்த அணி என்ற வேதனையான சாதனைப் பட்டியலில் 2ஆவது இடம் பிடித்தது மங்கோலியா. முதலிடத்தில் இசல் ஆப் மேன் அணி (10 ஓட், எதிர்: ஸ்பெயின், 2023) உள்ளது.

இவ்விரு அணிகள் மோதிய 3 போட்டி மழையால் பாதியில் கைவிடப்பட்டது.

# கிண்ணம் வென்றது இந்தியா

## பங்களாதேஷுக்கு வெள்ளையடிப்பு




ஐந்தாவது "ரி20" போட்டியில் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய பெண்கள் அணி 5:0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றி கிண்ணம் வென்றது.

பங்களாதேஷ் சென்றுள்ள இந்திய பெண்கள் அணி, அங்கு ஐந்து போட்டிகள் கொண்ட "ரி20" தொடரில் பங்கேற்றது.

முதல் நான்கு போட்டியில் இந்தியா வென்றிருந்த நிலையில் 5ஆவது இறுதியுமான போட்டி நேற்று சில்ஹெட்டில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஸ்மிருதி மந்தனா (33), ஹேமலதா (37), அணித் தலைவர் ஹர்மன்பிரீத் கவுர் (30) கைகொடுத்தனர்.

20 ஓவர்களில் இந்திய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 156 ஓட்டங்களை எடுத்தது. ரிச்சா கோஷ் (28), தீப்தி சர்மா (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

சவாலான இலக்கை விரட்டிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களை மட்டும் எடுத்து தோல்வியடைந்தது.

ரிது மோனி (37), ஷோரிபா (28*) ஆறுதல் கொடுத்தனர்.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் ராதா யாதவ் 3, ஆஷா சோபனா 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர். ஆட்ட நாயகி, தொடர் நாயகி (10 விக்கெட்) விருதுகளை இந்தியாவின் ராதா யாதவ் கைப்பற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்க தயார்

## ராகுல தேரர் பகிரங்கம்

(கொழும்பு)

**இலங்கையில் உள்ள தமிழர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கவும் தமிழ் அரசியல் தலைவர்களின் ஆதரவுடன் மக்களுக்காக சேவை செய்யவும் தான் உள்ளிட்ட காவி உடையணிந்த தேரர்கள் தயாராக இருப்பதாகவும் ராகுல தேரர் தெரிவித்துள்ளார்.**



இலங்கையில் தான் மரணிக்கும் முன் தமிழ் விகாரையொன்று கட்டப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணல் ஒன்றின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு, அந்த தமிழ் விகாரையில், நூற்றுக்கணக்கான தமிழ் தேரர்கள் இருக்க வேண்டுமெனவும், அச்சமின்றி தமிழர்கள் விகாரைகளுக்கு செல்லும் நிலை நாட்டில் ஏற்பட வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

எனினும், தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைவர்கள் தேரர்களிடம் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள ஏன் தயங்குகிறார்கள் என்றும் தேரர் கேள்வியெழுப்பியுள்ளார்.

இதேவேளை, ஈழத்தமிழர்கள் உலகின் பல நாடுகளில் தற்போது பரந்து வாழ்ந்து சாதனை படைத்துள்ளதாகவும் அவர்களுக்கு இலங்கையை கைப்பற்ற வேண்டுமென்ற அவசியம் கிடையாது எனவும் ராகுல தேரர் தெரிவித்துள்ளார். (நி)

## மைத்திரியின் தடை நீடிப்பு



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதற்கு விதிக்கப்பட்ட தடையை எதிர்வரும் 29ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட மனு நேற்று வியாழக்கிழமை கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு வந்த நிலையில் இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)



இந்தியாவின் தமிழ் நாட்டின் தஞ்சாவூர் மாநகரில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் யாழ்ப்பாணம் நீர்வேலியினை தளமாகக் கொண்டு இயங்கும் Greenlayer சுற்றுச்சூழல் அமைப்பிற்கு நம்மாழ்வார் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. 27.04.2024 மற்றும் 28.04.2024 சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்களும் நடைபெற்ற நம்மாழ்வார் திருவிழாவில் யாழ்ப்பாணம் நீர்வேலியினைத் தளமாகக் கொண்டு இயங்கும் Greenlayer சுற்றுச்சூழல் அமைப்பின் சேவையைப்பாராட்டி இவ் விருது வழங்கப்பட்டது

### கடந்த ஆண்டில் மட்டும்

## 1769 போலித் தாள்கள் கண்டுபிடிப்பு - இலங்கை மத்திய வங்கி

(கொழும்பு)

கடந்த ஆண்டில் மட்டும் 1,769 போலி நாணயத்தாள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கியின் நிதி அறிக்கைகள் மற்றும் செயற்பாடுகள் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு மே மற்றும் டிசம்பர் மாதங்களுக்கு இடையில் கண்டுபிடிக்கப்பட்ட 1,769 போலி நாணயத்தாள்கள் 11 நீதிமன்ற வழக்குகளுக்காக இலங்கை மத்திய வங்கி நீதி அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளது.

இலங்கையில் ஒரு மில்லியன் நாணயத் தாள்களுக்கு சுமார் 1.4 போலி நாணயத் தாள்கள் புழக்கத்தில் உள்ளதாக இலங்கை மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இது ஒரு மில்லியன் நாணயத்தாள்களுக்கு 15 போலி நாணயத் தாள்கள் என்ற உலகளாவிய சராசரி வீதத்துடன் ஒப்பிடும் போது கணிசமான குறைவாகும். (நி)

## வீதிப்பாதுகாப்பு விழிப்புணர்வு நடைபவனி யாழில்




(யாழ்ப்பாணம்)

வீதிப்பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக யாழில் விழிப்புணர்வு நடைபவனி நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது.

அதன்படி, நேற்று மு.ப 8.30 மணியளவில் யாழ்ப்பாணம் வேம்படிச் சந்தியிலிருந்து யாழ் போதனா வைத்தியசாலை வீதியூடாக காங்கேசன்துறை வீதி சத்திரச் சந்தி வரை இந்த வீதிப் பாதுகாப்பு விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது.

வீதியில் காணப்படும் இடர்பாடுகளுடைய இடங்களை அடையாளங்காணல், வீதிப் பாதுகாப்பு மற்றும் வாகன நடைமுறைகளைப் பின்பற்றல், பரிசோதனை போன்ற செயற்பாடுகள் இந்த நிகழ்வில் நடைபெற்றன. இந்த விழிப்புணர்வு நிகழ்வினை தொடர்ச்சியாக ஏனைய பகுதிகளில் நடத்தவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், யாழ்ப்பாண மாவட்ட [illegible], வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர், மோட்டார் வாகன பரீட்சகர்கள், அதிகாரிகள், யாழ்ப்பாண பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர், போக்குவரத்து பொலிஸார், வைத்தியர்கள், மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-33)

## தோட்டத்திற்குள் புகுந்த யானைகளால் பயிர்கள் நாசம்-விவசாயி கவலை

(தருமபுரம்)



முல்லைத்தீவு மாவட்ட விசுவமடு மேட்டுப்பட்டி தெரு கிராமத்தில் விவசாயி ஒருவரின் பயிர்களை யானைகள் சேதப்படுத்தியுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் நள்ளிரவு வேளை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 3 யானைகள் தமது தோட்டத்தில் உட்புகுந்து அறுவடை செய்யும் தருவாயில் இருந்த வத்தகைப்பழங்கள் மற்றும் 100 இற்கும் மேற்பட்ட வாழை மரங்கள் என்பனவற்றை சேதமாக்கியுள்ளதென உரிமையாளர் கவலை தெரிவித்தார்.

மேலும் குறித்த கிராமத்தில் நீண்டகாலமாக யானைகள் தமது வாழ்வாதாரங்களை அழித்து வருவதாகவும் யானை வேலிகள் போடப்பட்டு வேலைகள் பூர்த்தியாகாத நிலையில் உள்ளதாகவும் தற்பொழுது ஏற்பட்டுள்ள அதிக வெப்பநிலை காரணமாக அதிகளவில் விற்பனை செய்யக்கூடிய வத்தகைத் தோட்டம் அறுவடை செய்து விற்பனை செய்யும் நேரத்தில் சேதமடைந்தமை மிகுந்த வேதனை அளிக்கின்றது எனவும் தெரிவித்திருந்தார். (நி-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

## சைவ சித்தாந்த பண்டிதர்

## சிவஸ்ரீ.தியாக.சோமாஸ்கந்தராஜாக்குருக்கள்

( BA, MA, Dip.in.Edu. பிரதி அதிபர்)



தும்பளை நெல்லண்டை பத்திரகாளி
அம்மன் தேவஸ்தானம்,
இலட்சுமணந் தோட்டம்
அருள்மிகு வீரமாகாளியம்மன்
வடபத்திர காளி அம்மன் தேவஸ்தானம்
பிரதம குருவும், ஆதீன கர்த்தாவும்,
தேவஸ்தானாதிபதியும்

அட்ஷய திருதியை நன்னாளில்
அம்மன் வெளிமடை பொன்நாளில்
சகல ஐஸ்வரியங்களும்
கிடைக்கும் இந் நாளில்
எமது சகல ஐஸ்வரியங்களையும்
தொலைத்த மூன்றாவது ஆண்டு இது

தனது அன்பன் வாக்கை மெய்யாக்கிட
தன்னடியில் தருவித்தாள் அன்னையவள்
இத்திமா மரத்தாள்
பாதக்கமலத்தில் இன்புறவே
சரண் புகுந்தார் இன்னாளிலே

(ஏ-0321)

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமராட்சி வடக்கு தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில்

## வருடாந்த வெளிமடை உற்சவம் 2024.05.10-11ம் திகதி

## அறிவித்தலும்,ஆசித்தலும்,பூசித்தலும்

### நெல்லண்டை அம்மன் துதி

**நெல்லண்டை வாழும் இத்தி மரத்தாய்**
**மனக்குறை எல்லாம் தீர்த்திடுவாய்-உன்**
**திருவடி தேடி வருபவரை**
**திருவருள் புரிந்தே காத்திடுவாய்**

**நெல்லண்டை வீதியிலே வீற்றிருக்கும் தாயே**
**எமக்கருள் தாரும் அம்மா**
**இத்திமரத்தாளே பொருளாசை,மண்ணாசை**
**பெண்ணாசை எல்லாம் உனக்கே அடைக்கலம்.**



சுபமங்களம் நிறைந்த குரோதி வருஷம் சித்திரை 27 ஆம் நாள்(10.05.2024) வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை நடைபெற இருக்கும் அனைத்து தெய்வதா கைங்கரியங்களும்,பூர்வீகம் பிசகாது நடைபெறத் திருவருள் நிறைய எல்லாம் வல்ல அன்னை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மனை ஆசிவேண்டி யும்,அடிபணிந்து வாழ்த்திக் கொண்டும், அனைத்து நிலை-அடியார்களும், அன்பர்களும்,உரித்தாளர்களும் வந்து அனைத்து வழிபாடுகளையும் வேண்டுதல் களையும் நிறைவேற்றிக் கொள்க. அன்னையை எல்லோரும் வேண்டிக் கொள்வோம். ஆசித்தலும் பூசித்தலும் சிறப்புற அன்னை அருள் தருக.

**மடைப் பண்டம் எடுத்தல், பி.பகல் 5 மணிப் பூஜையுடன் இடம்பெறும். வளந்து வைத்தல்:- இரவு 11 மணிக்கு நடைபெறும்.**

**அன்னையின் அடிமை :**
**அமரர்-சைவ சித்தாந்த பண்டிதர்,**
**சிவஸ்ரீ.தியாக.சோமாஸ்கந்தராஜாக்குருக்கள்**
**சிவஸ்ரீ.சோம.தனஞ்சயக்குருக்கள்**
**சிவஸ்ரீ.இராம.சுந்தரலிங்கக்குருக்கள்**
**பிரதம குருமாரும்,ஆதீன கர்த்தாக்களும்**
**தும்பளை நெல்லண்டை,பத்திரகாளி அம்மன் கோவில்**

## குலதெய்வ வழிபாட்டு நடைமுறைகள்

குலதெய்வ வழிபாட்டு நடைமுறைகள் இன்று பல்வேறுபட்ட மாற்றங்களுக்கு உள்ளாகி கோயில் வழிபாட்டு நடைமுறைகளோடு இணைக்கப்பட்டும் சில குலதெய்வ வழிபாட்டு நடைமுறைகள் புறந்தள்ளப்பட்டும் உள்ளன. எனவே அவற்றை இனங்கண்டு கொள்வதும் கடினமாயுள்ளது. எனினும் பண்டைய மரபான முறைகள் சிறப்பாக சில கோவில்களிலே பேணப்பட்டு வருகின்றன. அந்த வகையில் தும்பளை கிராமத்தில் உள்ள நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் திருக்கோவில் குலதெய்வ வழிபாட்டு நடைமுறைகளையும் இன்றும் பேணுகின்ற ஒரு தனித்துவமான சிறப்பை கொண்டு விளங்குகிறது. இங்கு நடைமுறையாக இன்றும் உள்ள "வெளிமடை" என்னும் வழிபாட்டு மரபு இதற்குச் சான்றாக விளங்குகிறது.

தும்பளையில் வாழ்ந்த முன்னோர் தம்முடைய குலதெய்வமாக நெல்லண்டை அம்மனை வழிபட்டனர். நெல்லி மரங்கள் அடர்த்தியாக இருந்த இடத்தில் ஒரு பெரிய மாமரத்தின் நிழலிலே அம்மன் குலதெய்வமாக உறைந்திருந்தாள். அருகே இத்தி மரம் படர்ந்து செழித்து இருந்தது. கர்ண பரம்பரையான கதைகள் கோயிலின் தோற்றத்தைக் கூறப் பயன்பட்டாலும் வழிபாட்டு மரபில் நெல்லண்டையாள், இத்திமரத்தாள் என முன்னோரால் குறிப்பிடப்பட்ட பெயர்கள் குலதெய்வ வழிபாட்டில் மரபுத் தொடர்ச்சியைச் சுட்டி நிற்கின்றன. அந்த வழிபாட்டிடம் கோயில் அமைப்பைப் பெற்றபோதும் மாமரமும், இத்திமரமும், நெல்லி மரங்களும் இணைந்திருந்தன. தும்பளையை ஊடறுத்துச் செல்லும் "நெல்லண்டை" வீதியும் இதற்கு இன்றும் சான்றாக உள்ளது.

"வெளிமடை" என்னும் சிறப்பான வழிபாட்டு நடைமுறை ஆண்டுக்கொரு முறை தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. முக்கனிகளும் காய்களும் விளையும் காலத்திலே இந்த வெளிமடை பரவப்பப்பட்டு வழிபாடு செய்யும் மரபு இன்னமும் புலப்படுகிறது. பொங்கல் மடை, பூ மடை, காய்மடை, கனிமடை என ஊர் மக்கள் தாம் பெற்ற விளை பொருட்களை வெளியே பரவி வழிபாடு செய்தனர். காவடி, கரகம், பாற்செம்பு என வழிபாட்டு நடை முறைகளும் இருந்தன. காவடி என்பது வழிபாடு நடக்கும் இடத்திற்கு விளை பொருட்களைக் கொண்டு செல்வதற்காக ஒரு நீண்ட தடியில் இருபுறமும் அவற்றை சமநிலையே கட்டித் தோளிலே சுமந்து செல்வர். இது "காவுதடி" என அழைக்கப்பட்டு பின்னர் காவடி என மருவியுள்ளது. "கரகம்" என்பது வழிபாடு செய்யும் இடத்தில் பொங்கல் செய்வதற்கும் ஏனைய பொருட்களைத் தூய்மைசெய்வதற்கும் உரிய நீரைக் குடங்களிலே சுமந்து வருவது. பாற்செம்பு என்பது பால் மடைக்காகச் சிறிய குடங்களில் பாலை நிரப்பி வேப்பிலையால் மூடிக் கொணர்வது. வழியிலே தலையில் சுமந்து வரும் போது தும்பு, தூசி, பறவை எச்சம் என்பன விழுந்து விடாதிருக்கவே இவ்வாறு இலைகளால் மூடிக்கொண்டு வரும் வழக்கம் இருந்துள்ளது. தமிழ்ச் செவ்வியல் இலக்கியமான பரிபாடல் இவ் வழக்கத்தை விளக்கமாகப் பதிவு செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. இன்று இவ்வழக்கத்தோடு சில புனைவுகளும் ஆடலும் பாடலும் இணைந்து விட்டன. உடுக்கு, பறை, தாளம் போன்ற இசைக் கருவிகள் இசைக்கப்படுகின்றன.

குலதெய்வ வழிபாட்டில் பொங்கல் மடை மிகவும் இன்றியமையாதது. குழந்தைப் பேறு, குழந்தைக்குச் சோறூட்டல், திருமணம், ஆநிரைக் காவல், நோய்க்காப்பு. இயற்கை அழிவுக் காப்பு என்னும் நிலைகளில் குடும்ப நிலையிலே பொங்கல் மடை செய்யப்பட்டது. ஆனால் ஆண்டுக்கொரு முறை செய்யப்படும் வெளிமடையில் ஊரவர் எல்லோருமே ஒன்றாய் கூடிப் பொங்கல் செய்து மடைபரவி வழிபடுவர். தூபம், தீபம், மலர் என்பன வழிபாட்டில் முதன்மையாகக் கருதப்பட்டன. வெளிமடை வழிபாட்டிலும் அயல் ஊரவரும் கலந்து கொள்ளும் நடைமுறையும் இருந்துள்ளது. எனவே ஊரவரிடையே இணைப்பு வழிபாட்டில் ஒரு கூட்டுறவையும் ஏற்படுத்தும் செயற்பாடாகவும் முற்காலங்களிலே குலதெய்வ வழிபாடு நடைபெற்றதை அறியமுடிகிறது. மக்கள் தாங்களே விளைபொருட்களையும், பொங்கலையும், மடைபரவி பூவும். புகையும் சொரிந்து விளக்கு ஏற்றி வழிபட்டனர். குடும்பமாக வந்து குறையிரந்து வழிபட்டனர்.

இன்னும் குலதெய்வ வழிபாடு நேர்த்திக்கடன் என்ற நிலையிலும் செய்யப்பட்டது. பொங்கல். காவடி, பாற்செம்பு எடுத்தல், குளிர்த்தி செய்தல், கூத்து ஆடுதல். சோற்றுக் கொடை செய்தல் எனப் பல நடைமுறைகள் செய்யப்பட்டன. மழை வேண்டியும் வெள்ளப்பெருக்கின் இடர்தீரவும்.பட்டி பெருகவும் விளைபொருள் பெருகவும் தொற்று நோய் தீரவும். நேர்த்திக் கடன்கள் செய்யப்பட்டன. மகப்பேற்றில் வருகின்ற சிக்கல்கள் தீரவும் குலதெய்வ வழிபாடு செய்யப்பட்டது.

குல தெய்வ வழிபாட்டின் நடைமுறைகள் தற்போது பல திருக்கோயில்களில் புறந்தள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக பல கோயில்களில் பொங்கல் மடை,



குளிர்த்தி மடை என அம்மக்கள் தமது முன்னோரது நம்பிக்கையாக இருந்த வழிபாட்டு நடைமுறைகளைச் செய்வதற்கு இடையூறு ஏற்பட்டது. எடுத்துக் காட்டாக ஒரு நடைமுறையைச் சுட்டலாம்.

குலதெய்வ வழிபாட்டில் வளமான மரத்திற்கு திருநீரூற்றி வழிபடுவது ஒரு தனித்துவமான மக்கள் தாமே செய்கின்ற வழிபாட்டு நடைமுறையாக நீண்ட காலமாக நிலவியுள்ளது.அதன் தொடர்ச்சியாக திருக்கோயில் அமைப்பு தோன்றிய பின்னரும் தலவிருட்சத்திற்கு நீரூற்றி மக்கள் வழிபடும் மரபு பேணப்பட்டது. ஆனால் தற்போது இந்த வழிபாடு கோவில் அறங்காவலர்களால் புறந்தள்ளப்பட்டு வருகிறது. மரத்திற்கு நீரூற்றக் கூடாது என கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இது மக்களுடைய நீண்ட காலமாக வழிபாட்டு மரபையும் உளச்சீர்மியத்தையும் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியாமையினால் ஏற்பட்ட சிக்கலாகும். இது "கரகம் எடுத்தல்" என்னும் நேர்த்திக்கடனின் தொடக்கமான நடைமுறையாகும். வழிபாட்டிடத்திலேயுள்ள பெருமரத்தினடியிலே கரகத்தில் சுமந்து வந்த நீரை ஊற்றி மனக்குறைதீர வழிபாடு செய்வதே நடைமுறையாக இருந்தது. வெப்பு நோயால் துன்பப்பட்டவரும். அங்கக்குறைபாடுடையவரும் குழந்தைப்பேறு அற்றவரும் வழிபடும் மரத்திற்கு 21 குடம் நீரூற்றி வழிபட்டுத் தமது குறைபாடு நீங்கப் பெற்றனர். இது வழிபாட்டால் நாம் பெறும் உளச்சீர்மியமாகும். மனக்குறை தீர வழிபட்டால் உள்ள நீர் நிலையிலிருந்து குடத்திலே நீரை நிரப்பி வந்து 21 முறை ஊற்றும் போற்றும் உள்ளம் முழுமை யாக அப்பணியிலே ஈர்க்கப்பட உள்ளத்தின் உறைநிலை தளர்வடையும். அப்பணியை நிறைவேற்றிய பின் உள்ளத்திலே ஒரு நிறைவும் கிளர்ச்சியும் வந்து சேர்ந்திருக்கும். வழிபாட்டால் எமக்கு எதையும் செய்யக் கூடிய தொரு ஆற்றல் கிடைக்கும் என்ற உறுதியான நம்பிக்கை உண்டாகும். இந்த வழிபாட்டு நடைமுறையைத் திருநாவுக் கரசர் திருவையாறு என்னும் திருக்கோயிலே பாடிய பதிகத்திலே பதிவு செய்துள்ளார்.

**"போதொடு நீர் சுமந்தேத்திப் புகுவாரவர் பின் புகுவேன்"**
என நீர் சுமந்து வழிபடச் சென்றதைக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இன்றைய விஞ்ஞானத்தின் வளர்ச்சி நிலைகளும் தொழில் நுட்பப் பொறிகளின் பெருக்கமும் குறிப்பாக இளைய தலைமுறையினரின் குலதெய்வ வழிபாடு பற்றிய முன்னோரது நம்பிக்கை மறுகின்ற நிலையைத் தோற்று வித்துள்ளன. அவர்களுடைய அறிவீனத்தை இப்போதே நீக்குவதற்கு நாம் ஆவன செய்ய வேண்டும். அவர்களுடைய வேகமான செயற்பாடுகளைச் சமநிலைப்படுத்த வழிபாட்டுப் பயிற்சியே இன்றியமையாதது. பெருமரத்திலும் உயர்ந்த மலையிலும் பரந்த நீர் நிலையிலும் உள்ள பேராற்றலை விஞ்ஞானத்தால் அடக்கி விடலாம் என இளைய தலைமுறை பகற்கனவு கண்டு கொண்டு வாழ்கிறது. இந்த மனிதப் பிறவியிலே தான் இயற்கையின் பேராற்றல் கண்டு இயற்கையோடு இயைபுபட்டு மகிழ்ச்சியாக வாழமுடியும் என்பதை எமது முன்னோர்கள் வாழ்ந்து காட்டினார்கள்.

(சி-0321)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# வடகொரியாவின் 'கோயபல்ஸ்' கிம் கி நாம் உயிரிழப்பு



(பியாங்யாங்)

வட கொரியாவில் 'கோயபல்ஸ்' என்று அழைக்கப்படும், வட கொரிய ஜனாதிபதி கிம் குடும்ப பிரசார வியூக ஆலோசகர் கிம் கி நாம் உயிரிழந்தார். அவருக்கு வயது 94. 1966 முதல் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் குடும்பத்துக்கு மூன்று தலைமுறைகளாக பிரசார வியூகங்களை வகுத்துக் கொடுத்தவர் கிம் கி நாம். கிம்மின் தாத்தா கிம் ஜட சுங் காலம் தொடங்கி, கிம்மின் அப்பா கிம் ஜாங் இல் மற்றும் தற்போதை ஜனாதிபதி கிம் ஜாங் உன் வரை கிம் கி நாம் பிரசார ஆலோசனையை வழங்கியுள்ளார்.

கிம் குடும்பத்தை பொறுத்தவரை பிரசாரங்கள் முக்கிய அம்சமாக இருந்து வருகின்றன. ஊடகங்கள், சமூக ஊடகங்கள் என அனைத்தும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்குகின்றன. கொரியன் சென்ட்ரல் நியூஸ் ஏஜென்ஸி வழங்கும் செய்திகளை மட்டுமே ஊடகங்கள் வெளியிட முடியும்.

அதே போல மறைந்த இரண்டு தலைவர்களின் புகைப்படங்கள் அடங்கிய சிறிய கொடியை மக்கள் தங்கள் உடைகளில் குத்தியிருக்க வேண்டும். மேலும் பள்ளி, கல்லூரி புத்தகங்களிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் கிம் குடும்பத்தினர் பற்றிய பராக்கிரம கதைகள் தொடர்ந்து இடம்பெறும். இது போன்ற பிரசார உத்திகள் அனைத்தையும் வடிவமைத்தவர் கிம் கி நாம்.

இதன் காரணமாக, ஹிட்லரின் நாசிப் படை பிரசாரகராக இருந்த ஜோசப் கோயபல்ஸுடன் கிம் கி நாம் ஒப்பிடப்படுவதுண்டு. வடகொரியாவின் கோய பல்ஸ் என்று இவரை ஊடகங்கள் அழைத்து வந்தனர்.

இந்த நிலையில் கடந்த சில ஆண்டுகளாக உடல் நலக்குறைவால் அவதிப்பட்டு வந்த கிம் கி நாம், பல்வேறு உறுப்புகள் செயலிழப்பு காரணமாக உயிரிழந்ததாக வட கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)



## ஐஸ்லாந்தில் அவசர நிலை பிரகடனம்



(ஐஸ்லாந்து)

தெற்கு ஐஸ்லாந்தில் உள்ள ரெய்க்ஜேன்ஸ் தீபகற்பத்தில் செயற்படும் எரிமலை காரணமாக அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த எரிமலை தற்போது எரிமலைக் குழம்பு புகைளை கக்குவதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன் ஐஸ்லாந்தின் மிகவும் பிரபலமான சுற்றுலாத் தலங்களில் ஒன்றான ப்ளூ லகூன் அபாயகரமான பகுதியாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், எரிமலையைச் சுற்றி விமானங்கள் செல்வதற்கு எவ்வித தடைகளும் இல்லை என வெளிநாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (நி)

# பிரேசிலில் வரலாறு காணாத ம
# உயிரிழப்பு 100 ஆக அ

(பிரேசில்)

பிரேசிலில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக பெய்துவரும் கனமழை காரணமாக ஏற்பட்ட பெருவெள்ளத்தில் இதுவரை 100 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 2 இலட்சம் பேர் தங்கள் இருப்பிடத்தை விட்டு வெளியேறியுள்ளனர்.

தெற்கு பிரேசிலின் ரியோ கிராண்டே டோ சுல் மாகாணத்தில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக கனமழை பெய்து வருகிறது. ஐந்து மாதங்கள் பெய்ய வேண்டிய மழை ஒரே வாரத்தில் கொட்டித் தீர்த்துள்ளதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இதனால் அங்கு வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

மாகாணத்தின் பல்வேறு பகுதிகள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. இந்த வெள்ளத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 100 ஐ தாண்டியதுள்ளது. மேலும் காணாமல் போனவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பல்வேறு இடங்களில் குடிநீர் வசதி, மின்சாரம், இணையம், தொலைதொடர்பு உள்ளி

## ஆப்கானிஸ்தானில் வெடிகுண்டு தாக்குதல்
### 3 பேர் உயிரிழப்பு



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் படாக்ஷான் மாகாணத்தில் பைசாபாத் நகரில் பாதுகாப்பு படையினரை ஏற்றிக் கொண்டு வாகனம் ஒன்றின் மீது வெடிகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது இதில், 3 பேர் உயிரிழந்துள்ளதுடன் 5 பேர் காயமடைந்தனர். இதுபற்றி தலீபான்களின் உள்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் அப்துல் மதின் குவானி தெரிவிக்கையில் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டு அது வெடித்ததில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

அத்துடன் கஞ்சா செடிகளை அழிப்பதற்காக அவர்கள் சென்ற போது, இந்த சம்பவம் இடம் பெற்றது என்றும் இந்த பகுதியில் தலிபான்கள் பாதுகாப்பை பலப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்[illegible] ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# முன்பக்க சக்கரங்கள்
# தரையிறங்கிய வி

(துருக்கி)

இஸ்தான்புல் விமான நிலையத்தில் போயிங் 767 விமானம் ஒன்று முன்பக்க தரையிறங்கும் கருவி இல்லாமல் தரையிறங்கும் பயங்கரமான வீடியோ காட்சிகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி அதிர்ச்சியை உருவாக்கியுள்ளது.

பாரிஸிலிருந்து இஸ்தான்புல் நகருக்குச் சென்ற சரக்கு விமானத்தின் முன்பக்க தரையிறங்கும் கருவி செயலிழந்த காரணத்தால், பின்பக்க கியர் மற்றும் சக்கரங்களைக் கொண்டு விமானம் தரையிறக்கப்பட்டது.

ஃபெட்எக்ஸ் எக்ஸ்பிரஸ் விமானத்திற்கு சொந்தமான போயிங் 767 சரக்கு விமானத்தின், முன்பக்க கியர் செயலிழந்து தொழில்நுட்ப சிக்கல்களை எதிர் கொண்டது. அதனால் விமானி இஸ்தான்புல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவியேற்றவுடன் அதிரடித் திட்டம்

## ரஷ்ய ஜனாதிபதி புடின்



**(மொஸ்கோ)**

**ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மேற்கத்தேய தலைவர்களை சோதிப்பதற்காக நேட்டோ நாட்டின் மீது "சிறு படையெடுப்பை" திட்டமிடுவது குறித்து பரிசீலித்து வருவதாக போலந்தின் உயர்மட்ட உளவு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.**

போலந்தின் எதிர் புலனாய்வு சேவையின் தலைவரான ஜரோஸ்லா ஸ்ட்ரோசிக், பால்டிக் நாடுகளை கைப்பற்றுவதற்கான பரந்த திட்டத்தின் ஒரு பகுதியாக எஸ்டோனியா மற்றும் ஸ்வீடனின் சில பகுதிகளை ஆக்கிரமிப்பதை ரஷ்ய தலைவர் பரிசீலிப்பதாக தெரிவித்துள்ளார்.

பால்டிக் நாடுகளில் ஒன்றிற்கு எதிராக சில சிறிய நடவடிக்கைகளுக்கு புடின் ஏற்கனவே தயாராகிவிட்டதாவும் போலந்தின் உயர்மட்ட அதிகாரி எச்சரித்துள்ளார்.

உக்ரைனை ஆதரிப்பதற்காக மேற்கு நாடுகள் ஒன்றிணைந்து செயற்படுகின்ற நிலையில், நேட்டோ நாடுகள் மீது புடின் தாக்குதல் நடத்தினால் இது மூன்றாம் போருக்கு வழி வகுக்கும் என்பதும் சுட்டி காட்டத்தக்கது. (நி)

## மழை, வெள்ளம் அதிகரிப்பு



...ட்டவை துண்டிக்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய 1 லட்சம் வீடுகள் வெள்ளத்தில் சேதமடைந்துள்ளன.

சுமார் இரண்டு இலட்சம் பேர் அவர்களது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் மாகாணம் முழுவதும் 15 ஆயிரம் தீயணைப்பு வீரர்கள், பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஒரு வாரத்தில் பெய்த மழை மற்றும் வெள்ளத்தால் 904 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பு ஏற்பட்டிருப்பதாக பிரேசில் அரசு தெரிவித்துள்ளது. (நி)

## இந்திய பாராளுமன்றத் தேர்தலில் தலையிட அமெரிக்கா முயற்சி- ரஷ்யா குற்றச்சாட்டு

(மொஸ்கோ)

"இந்திய பாராளுமன்றத் தேர்தலில் அமெரிக்கா தலையிட முயற்சி செய்வதாக" ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா ரஷ்யா குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது இந்தியாவில் நிலவும் அரசியல் சமநிலையை சீர்குலைப்பதற்காகவே இந்தியாவின் தேர்தல் விவகாரங்களில் அமெரிக்கா தலையிட முயற்சி செய்வ தாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)



## ...ர் இல்லாமல் ... விமானம்

விமான நிலைய அதிகாரிகளை தொடர்பு கொண்டு விமானத்தை அவசரமாக தரையிறக்கினார். இந்த சம்பவத்தையடுத்து ஓடு பாதை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

துருக்கியின் போக்குவரத்து அமைச்சகம் வெளியிட்ட தகவல்களின்படி, இந்த விபத்தினால் உயிரிழப்புகள் எதுவும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## ரஃபா மீது தாக்குதல் நடத்தினால் இஸ்ரேலுக்கான சில ஆயுதங்களை நிறுத்துவோம்

## அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

இஸ்ரேல் காசா நகரமான ரஃபா மீது பாரிய தாக்குதலை மேற்கொண்டால் இஸ்ரேலிற்கு சில ஆயுதங்களை வழங்குவதை நிறுத்துவோம் என அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் எச்சரித்துள்ளார்.

அதேவேளை இஸ்ரேல் பாதுகாப்பாகயிருப்பதை தொடர்ந்தும் உறுதி செய்வேன் எனவும் பைடன் தெரிவித்துள்ளார்.

நாங்கள் ஆட்டிலறி எறிகணைகளையும் ஆயுதங்களையும் இஸ்ரேலிற்கு வழங்கமாட்டோம் தற்போது ரஃபாவில் காணப்படும் நிலையை தரைநடவடிக்கை என அமெரிக்கா தெரிவிக்காது இஸ்ரேலிய படையினர் இன்னமும் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளிற்குள் செல்லவில்லை என தெரிவித்துள்ள பைடன் இஸ்ரேலிய படையினர் எல்லையில்தான் உள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.



ஆனால் மக்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் இஸ்ரேலிய படையினர் நுழைந்தால் நாங்கள் ஆதரிக்கமாட்டோம் என இஸ்ரேலிய பிரதமருக்கு தெளிவாக தெரிவித்துள் ளேன் எனவும் ்பைடன் குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமார் 2000 குழந்தைகள் தலசீமியா நோயால் பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஏறக்குறைய இரண்டாயிரம் குழந்தைகள் பீட்டா தலசீமியா நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தலசீமியா நோய் வைத்திய நிபுணர் டொக்டர் ஈ. எம். ரஞ்சனி எத்ரி சூரிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச தலசீமியா தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் கொழும்பு சுகாதார மேம்பாட்டு அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே விசேட வைத்தியர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தலசீமியா ஹீமோகுளோபின் உற்பத்தியில் குறைபாடுகளை ஏற்படுத்தும், மரபணு மாற்றத்தால் ஏற்படும் நோய் என்பதால், குழந்தைகளுக்கு அதிக அளவு இரத்தம் கொடுக்கப்பட வேண்டும். தலசீமியா நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்கான செலவு சுகாதார அமைப்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும், நோயால் பாதிக்கப்பட்ட தனிநபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் மீது மிகப் பெரிய உளவியல் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

இந்நிலைமையை தடுப்பதற்கு நாட்டில் தலசீமியா பிரசவங்களின் எண்ணிக்கையைக் குறைப்பது முக்கியம். அதன்படி தல சீமியா கேரியர் நிலையை முன் கூட்டியே கண்டறிவதன் மூலம் தலசீமியா மேஜர் கொண்ட குழந்தைகள் பிறப்பதைத் தடுக்க முடியும். மேலும், திருமண த்திற்கு முன் அனைவருக்கும் தலசீமியா பாதிப்பு உள்ளதா என்பதை பரிசோதிப்பது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தலசீமியா என்பது ஒரு வகை சிவப்பணுக்கள் குறைபாடாகும். அதாவது மனிதர்களில் அரிதாக, சிலருக்கு அவர்களின் உடலில் இரத்தப்புலம் (ஹீமோகுளோபின்) தேவையான அளவை விடக் குறைவாக இருக்கும். இதற்குக் காரணம் சிவப்பணுக்கள் விரைவாகச் சிதைந்து போவதே. இந்நிகழ்வு சிவப் பணு சிதைதல் எனப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# டயானாவுக்கு பயணத்தடை

(கொழும்பு)


முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கு வெளிநாடு செல்வதற்கு நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

கொழும்பு நீதிவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை டயானா கமகேவுக்கான இந்த வெளிநாட்டு பயணத்தடையை விதித்தது. இரட்டை பிரஜாவுரிமை தொடர்பான வழக்கில் மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கையை பரிசீலித்த கொழு ம்பு நீதிவான் திலின கமகே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். இந்த உத்தரவின் பிரதிகள் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகம் மற்றும் தேசிய புலனாய்வுப் பணிப்பாளர் அலுவலகத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 160 | 150 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 100 | 100 |
| தக்காளி | 100 | 160 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 140 | 160 |
| கோவா | 150 | 200 | 170 | 200 |
| கரட் | 300 | 250 | 250 | 250 |
| பூசணி | 80 | 100 | 100 | 80 |
| புடோல் | 80 | 200 | 100 | 150 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 320 | 200 | 220 |
| பாகற்காய் | 300 | 400 | 300 | 450 |
| வெண்டக்காய் | 100 | 150 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 250 |
| லீக்ஸ் | 250 | 300 | 280 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 280 | 350 |
| கறிமிளகாய் | 150 | 200 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 600 | 700 | 400 | 600 |
| போஞ்சி | 200 | 350 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 120 | 120 | 150 | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 100 | 100 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 1000 | 1500 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 80 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 400 | 200 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 60 | 60 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 200 | 80 | 60 |
| ஈரப்பலா | -- | -- | 120 | -- |

# இன்று ஒரு தகவல் 119



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## பிரம்ம ஞானம்

நான் யார் என்பதை இந்த உலகிற்கு புரியவைக்கப் போகின்றேன் என்றார் ஒருவர். மிகவும் கோபமாகவும் இருந்தார். அவருக்கு எல்லா வசதியும் இருந்தது. ஏராளமான நிலம், வீடு, வாசல் என்று எதிலும் குறையில்லை. அப்படி இருந்தும் அவர் யார் என்பதை மற்றவர்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்பது அவரது ஆசை. ஏன் இப்படி கோபமாக இருக்கிறீர்கள், என்ன நடந்தது இப்போது? என்று அவரிடம் கேட்டார்கள். என்ன நடந்ததா? என்னுடைய தோட்டத்திலே அடுத்த தோட்டக்காரன் ஒரு அரை அடி வரப்பைத் தள்ளிப் போட்டுவிட்டார். என்ன தைரியம் அவனுக்கு! என்று பொரிஞ்சு தள்ளினார். நியாயமாக அளந்து பார்த்து சரி செய்தால் போய்விட்டது. அதற்காக ஏன் இதைப்போய் பெரிது படுத்திக் கொண்டு. விட்டுத் தள்ளுங்கள்! என்று மற்றவர்கள் யோசனை சொன்னார்கள்.

அது எப்படி விட்டுவிட முடியும். நான் யார் என்று அவனுக்கு புரிய வேண்டாமா? என்று துள்ளிக் குதித்தார். சரி! அதற்கு இப்போது என்ன செய்யப் போகின்றீர்கள்? என்றார்கள். ஹை கோர்ட், சுப்ரீம் கோர்ட் இல்லை கடைசி வரைக்கும் பார்த்து விடுகிறேன். என்னுடைய சொத்து முழுவதும் விற்றாலும் சரி கவலை இல்லை! என்றார். கடைசியிலே அவர் சொன்னது மாதிரியே செய்தார். சொத்து முழுவதையும் காலி செய்தார். கடைசியிலே நடுத்தெருவிலே நின்றார். நான் யார் என்று புரிய வைக்கிறேன் என்றார். புரிய வைத்து விட்டார். அந்த ஆள் ஒரு வரட்டுப் பிடிவாதக்காரர் என்பதை மற்றவர்கள் புரிந்து கொண்டார்கள். இப்போது அவருக்கே அவர் யார் என்பது புரியுதோ இல்லையோ? இந்த நிலைமைக்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? நான் என்கின்ற அகந்தை தான்! தன்னைப் பற்றியே உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கின்ற குணம் பல நபர்களிடம் இருக்கின்றது. அதனால் வரும் கஷ்டம் என்ன என்பதை அனுபவித்துப் பார்த்தால் தான் தெரியும். உண்மையான புகழ் இருப்பவர்களுக்கு அடைமொழி எதற்கு? என்று கேட்டார் ஒரு பெரியவர். அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்று அவர்கள் பெயரைச் சொன்னாலே பெருமை தான். அவர்களை எல்லாம் யாரும் "உயர் திருவாளர் அப்பர்" அவர்கள் என்று சொல்வதில்லையே.

சுக முனிவர் ஒரு சமயம் பிரம்ம ஞானம் பெற வேண்டும் என்று நினைத்தார். உடனே மிதிலா புரியை ஆட்சி செய்து கொண்டிருந்த ஜனக மன்னரைத் தேடி வந்தார். ஜனக மன்னர் ஒரு இல்லற ஞான மூர்த்தி. துறவிகள் எல்லாம் வந்து அவரை வணங்கக் கூடிய நிலைமையிலே இருந்தார். அரண்மனை வாசலிலே காவலன் நின்று கொண்டிருந்தான். சுக முனிவரைப் பார்த்ததும் என்ன வேண்டும் உங்களுக்கு என்று கேட்டான். நான் ராஜாவைப் பார்க்க வந்திருக்கிறேன் போய் சொல்லு என்றார். நீங்கள் யார்? தெரிந்தால் தானே சொல்லலாம்! யார் வந்து இருப்பதாக மன்னரிடம் போய் சொல்வது? என்று கேட்டான். சுகப் பிரம்ம மகரிஷி வந்திருக்கிறார் என்று சொல் என்றார்.

காவலன் உடனே உள்ளே போய் மகாராஜா! சுகப்பிரம்ம மகரிஷி அவர்கள் வந்திருக்கிறார். வாசலிலே நிற்கின்றார். உங்களைப் பார்க்க வேண்டுமாம்! என்றான். ஜனகர் லேசாக சிரித்தார். காவலனே! அவருடன் வந்திருக்கும் நாலைந்து பேரை விட்டு விட்டு அவரை மட்டும் வரச்சொல்! என்றார். காவலனுக்கு ஒன்றுமே புரியவில்லை. இருந்தாலும் ராஜா சொல்லிவிட்டாரே! அதனால் அப்படியே வந்து இவரிடம் சொன்னான். சுவாமி வந்திருப்பவர்களை விட்டு விட்டு உங்களை மட்டும் உள்ளே வரச் சொல்கிறார் ராஜா! என்றான். அவருக்கும் புரியவில்லை சிறிது நேரம் யோசித்தார். தன்னுடைய பேரிலே ஒட்டியிருக்கின்ற அடைமொழியினுடைய நீளத்தை கொஞ்சம் குறைத்தார். சுகப் பிரம்ம ரிஷி வந்திருக்கிறார் என்று போய்ச் சொல் என்றார். அதே மாதிரி அவனும் போய்ச் சொன்னான். ஜனகர் இன்னும் இரண்டு மூன்று பேர் இருக்கிறார்கள் அவர்களையும் விட்டு விட்டு வரச்சொல் என்றார். அதையும் வந்து இவரிடம் சொன்னான். இவர் மறுபடியும் சிறிது யோசித்து விட்டு சுகப் பிரம்மம் வந்திருக்கு என்று போய் சொல் என்றார். காவலன் போய் அப்படியே ராஜாவிடம் சொன்னான். இன்னும் ஒருவர் இருக்கிறார். அவரையும் விட்டு விட்டு வரச்சொல் என்றார் ராஜா. காவலன் வந்து இவரிடம் சொன்னான். இவர் யோசித்தார். கடைசியாக அப்பா! சுகன் வந்திருக்கிறான்! என்று போய்ச் சொல் என்றார். அவனும் போய்ச் சொன்னான்.

உள்ளே அனுப்பு! என்றார் ராஜா. சுக முனிவர் உள்ளே போய் ராஜா முன்னால் நின்றார். ஜனகர் சுக முனிவருக்கு நேரடியாக உபதேசிக்கவில்லை. அன்றைக்கு மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒருவனை அழைத்து இதோ பாருப்பா! உனக்கு விதித்த தண்டணையை நீக்கி விடுகின்றேன் ஆனால் நான் கூறும்படி செய்ய வேண்டும் என்றார். சரி என்றான். உன் தலையிலே மொட்டை அடித்து அதிலே ஒரு தட்டை வைத்து அதிலே கொஞ்சம் எண்ணெயை ஊற்றி வைப்பேன். நீ அப்படியே இந்த ஊரைச் சுற்றி ஒரு தரம் வரவேண்டும். ஒரு துளி எண்ணெய் கூட கீழே சிந்தக்கூடாது அப்படிச் சிந்தினால் உன்னுடைய தண்டனை உறுதியாகிவிடும்! என்றார். சரி என்று ஒத்துக் கொண்டான். அதே மாதிரி செய்தார்கள். இவன் மெதுவாகத் தெருவிலே இறங்கி நடக்க ஆரம்பித்தான். வழியிலே வான வேடிக்கை, நடனம், சங்கீதம் என்று என்னென்னவோ நடந்தது. இவன் எதையும் கவனிக்கவில்லை. கண், காது எல்லாம் இருப்பதை எல்லாம் மறந்துவிட்டு கவனம் முழுவதும் தலையிலே இருக்கும் தட்டிலே வைத்து எண்ணெய் சிந்தாமல் வந்து சேர்ந்தான். அவனுக்கு விடுதலையும் கிடைத்தது. சுக முனிவருக்கு உண்மை புரிந்தது. கவனம் முழுவதும் பரம்பொருளிடமே இருக்க வேண்டும்.

இந்த உலக நினைவு இருக்கக் கூடாது. அது தான் பிரம்ம ஞானம் என்று புரிந்து கொண்டார். பின்பு காட்டுக்குப் போய்விட்டார். ஆக எல்லாவற்றிற்கும் அடிப்படைத் தேவை என்ன வென்றால் நான் என்கின்ற கனம் குறைய வேண்டும். கடைசியிலே அது மறையவேண்டும். இந்தக் காலத்திலேயும் பலர் பட்டம், பதவி எல்லாம் பெயருடன் சேர்ப்பதில்லை. சிலர் இன்னும் ஒருபடி மேலே போய் பெயரை கூட விட்டு விடுகிறார்கள். கண்ணுசாமி என்பவரிடம் போய் நீங்கள் தான் கண்ணுசாமியா என்று கேட்டால் அது நான் இல்லை என்று சொல்லி விடுவார். ஏன் அப்படி என்று இரகசியமாக விசாரித்தால் அவர் கண்ணுசாமி என்ற பெயரிலே பலபேரிடம் கடன் வாங்கியிருக்கிறாராம். இப்போது பெயரை மாற்றிக் கொண்டாராம்! அதனாலே அது அவர் இல்லையாம்! பிரம்ம ஞானம் மாதிரி இது ஒரு ஞானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்குவரத்து சீரின்மையால்

# பெரும் சிரமங்களுக்கு மத்தியில் பரீட்சைக்கு செல்லும் மாணவர்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முட்கொம்பன் அரசபுரம் செக்காலை உள்ளிட்ட கிராமங்களுக்கான சீரான போக்குவரத்து வசதியின்மையால் கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சைக்கு செல்லும் சுமார் 50 மாணவர்கள் மற்றும் பொது மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருவதாக தெரிவித்துள்ளனர்

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அரசபுரம் செக்காலை முட்கொம்பன் கண்ணகைபுரம் உள்ளிட்ட கிராமங்களில் சுமார் 700 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன

இந்த நிலையில் குறித்த கிராமங்களுக்கான பிரதான போக்குவரத்து பாதையாக அமைந்துள்ள அக்கராயன் முட்கொம்பன் வீதி மற்றும் 10ஆம் கட்டை முட்கொம்பன் வீதி என்பன நீண்ட காலமாக புனரமைக்கப்படாத நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுகிறது. இதனால் குறித்த கிராமங்களுக்கான போக்குவரத்துக்கள் சீராக இடம் பெறுவதில்லை. அரச பேருந்து ஒன்று மாத்திரமே சேவையில் ஈடுபட்டு வருகின்றது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில் முட்கொம்பன் பாடசாலையிலிருந்து பூநகரி நல்லூர் மகாவித்தியாலயத்துக்கு சாதாரண தர பரிட்சைக்கு செல்லும் மாணவர்கள் தனியார் பேருந்து ஒன்றினை வாடகைக்கு அமர்த்தி ஒவ்வொரு மாணவர்களும் அதிக கட்டணம் செலுத்தி பரீட்சைக்குச் சென்று வருகின்றனர்.

வசதி குறைந்த மாணவர்கள் பெற்றோர்களின் உதவியுடனும் ஏனைய வீதியால் பயணிக்கும் வாகனங்களூடாகவும் பயணித்து தமது பரீட்சைக்கு சென்று வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சாலை முகாமையாளர் குறித்த பகுதிக்கான சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கடந்த சில நாட்களாக பேருந்து பழுதடைந்தமை மற்றும் சாரதி பற்றாக்குறை காரணமாக சேவைகள் இடம்பெறவில்லை எனவும் தற்போது குறித்த சேவைகள் இடம பெறுவதாகவும் அவர் தெரிவித்தார். (நி-315)

# இலவச திரைப்படக் காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள தந்தை செல்வா கலையரங்கில், தமிழகத் திரைப்படங்களுக்கு மாற்றாக, உலகின் பிறமொழித் திரைப் படங்களை ஒவ்வொரு மாதமும் திரையிட்டுக் கலந்துரையாடப்படவுள்ளது.


மக்கள் மத்தியில் நல்ல திரைப்பட இரசனையை வளர்ப்பதே இதன் நோக்கமாகும். அதோடு சற்று மாறுதலாக அமையும் தமிழ் திரைப்படங்களும் திரையிடப்படும்.

நாளை சனிக்கிழமை மாலை 4. மணிக்கு "ஒட்டால்" என்னும் மலையாள மொழித் திரைப்படம், ஆங்கிலத் துணைத்தலைப்புகளுடன் திரையிடப்படும். புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளர் அன்ரன் செக்கோவின் வான்கா என்னும கதையைத்தழுவி இது உருவாக்கப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற நெறியாளர் ஜெயராஜினால் உருவாக்கப்பட்ட இத்திரைப்படம். பல விருதுகளைப் பெற்றதாகும். திரைப்படக் காட்சியின் பின்னர் கலந்துரையாடலும் இடம்பெறும். (நி)

# மன்னார் வளைகுடாப் பகுதிகளில் பவளப்பாறைகள் அழியும் அபாயம்

## சமுத்திரவியல் விஞ்ஞானி தெரிவிப்பு



(கொழும்பு)

தற்போது அதிகரித்துள்ள கடல் வெப்பநிலை மேலும் ஒரு மாத காலம் நீடித்தால் இலங்கையைச் சுற்றியுள்ள கடலில் உள்ள பவளப்பாறைகள் அழியும் அபாயம் ஏற்படும் என சமுத்திவிரவியல் விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.

மன்னார் வளைகுடா மற்றும் இல்ட்சத்தீவு கடல் பகுதிகளில் பவ்ளப் பாறைகள் அழியும் அபாயகரமான சூழல் பதிவாகியுள்ளதாக இந்திய ஊடக ங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக தேசிய நீர்வள ஆராய்ச்சி மேம்பாட்டு முகாமைத்துவத்திற்கு (நாரா) புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் நாயகம் சமுத்திவிரவியல் விஞ்ஞானியான கலாநிதி.கே.அருளானந்தன் ஆங்கில ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

கடலில் வெப்பநிலை 31 டிகிரி செல்சியஸாக அதிகரித்து இரண்டு வாரங்கள் நீடித்துள்ளது. நாட்டிலுள்ள பவளப்பாறைகளின் நிலை குறித்து நாரா எந்த ஆய்வும் மேற்கொள்ளவில்லை, ஆனால் பவளப்பாறைகள் நிறத்தை இழந்து அழிவடையும் என்பதை நிராகரிக்க முடியாது.

பவளப்பாறைகள் உருவாக கடலின் வெப்பநிலை 27-28 டிகிரி செல்சியஸ் வரை ஏற்ற இறக்கமாக இருக்க வேண்டும். தற்போதைய அதிகரித்த வெப்பநிலை இன்னும் ஒரு மாதம் அல்லது அதற்கு மேல் நீடித்தால் பவளப்பாறைகள் அழிவடைவதை எதிர்பார்க்கலாம் என சுட்டிக்காட்டியுள்ளார்.

கடல்நீரின் வெப்பம் வழக்கத்தை விட அதிகரிக்கும்போது பவளப்பாறைகள் தமது நிறத்தை இழந்து வெளுக்கத் தொடங்குகின்றன. இதன் மூலம் பவளப்பாறைகளின் அழிவைத் தெரிந்து கொள்ள முடியும். பவளப்பாறைகள் அழிந்தால் அதைச் சார்ந்து வாழும் மீன்கள்உள்ளிட்ட ஏராளமான கடல் உயிரினங்க ளுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3112

வதனா




சத்தியா




விசால்




வசந்த்




ருத்ரா




யசிந்த




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 477





அவளே துரோகம் செய்து விட்டாள் என்று நினைத்து அவளை உயிருடன் கொளுத்த நினைத்தோம். பழிக்குப் பழி வாங்குவதாக எங்களுடன் சேர்ந்து அவளும் சபதம் செய்தபடியால் அவளை உயிரோடு விட்டோம். இன்று வரையில் அவள் வாக்கை நிறைவேற்றி வருகிறாள். ஓ! அவளுடைய உதவி மட்டும் இல்லாவிட்டால் நாங்கள் இவ்வளவு செய்திருக்க முடியாது."

"இன்னும் நீங்கள் ஒன்றும் சாதித்து விடவில்லையே?"

"கொஞ்சம் பொறு, அப்பனே! பார்த்துக்கொண்டேயிரு!" என்றான் ரவிதாஸன்.

"நம்மிடமிருந்து இவன் எல்லாம் தெரிந்து கொண்டான். நாம் கேட்டதற்கு மறுமொழி ஒன்றும் சொல்லவில்லையே?" என்றான் தேவராளன்:

"தம்பி! என்ன சொல்கிறாய்? எங்களுடன் சேர்கிறாயா? யார் கண்டது? உனக்கே ஒருவேளை அதிஷ்டம் அடிக்கலாம். நீயே ஒரு வேளை தென் தமிழகத்தின் வீர சிம்மாசனத்தில் ஏறினாலும் ஏறலாம். என்ன சொல்கிறாய்?

சில காலத்துக்கு முன்னே யென்றால் வந்தியத்தேவன், "ஆஹா! உங்களுடன் சேர்கிறேன்!" என்று சொல்லியிருப்பான். ஆனால் இளவரசருடன் மூன்று நாள் பழகியது அவனுடைய மனப் போக்கில் ஒரு பெரிய மாறுதலை உண்டு பண்ணியிருந்தது. பொய் புனை சுருட்டுகள், சமயோசித தந்திரங்கள் இவற்றில் அவனுக்குப் பற்று விட்டுப்போயிருந்தது. ஆகையால் பேச்சை மாற்ற விரும்பி, "இந்தக் கப்பலை எப்படிப் பிடித்தீர்கள்? சற்று முன் யமனுலகுக்கு அனுப்பிய அரபு நாட்டாருடன் எப்படிச் சிநேகமானீர்கள்!" என்று கேட்டான்.

"எல்லாம் என்னுடைய மந்திரசக்தி, அப்பனே! திரிகோணமலையில் இவர்களிடமிருந்துதான் நாங்கள் குதிரைகளை விலைக்கு வாங்கினோம். அந்தக் குதிரைகளைக் கொண்டு உங்களைத் தொடர்ந்து முன்னும் பின்னுமாக வந்து கொண்டிருந்தோம். 'யானை இறவுத் துறையில் இளவரசர் இறங்கி ஓடியதைப் பார்த்தோம். அவருக்கு முன்னால் இங்கு வந்துவிடத் தீர்மானித்துக் குறுக்கு வழியில் வந்து சேர்ந்தோம். இங்கே வந்து பார்த்தால், எங்கள் பழைய சிநேகிதர்கள் இந்தக் கப்பலைக் கைப்பற்றியிருந்தார்கள். அவர்கள் ஏறி வந்த கப்பல் முல்லைத்தீவுக்கு அருகில் கரைதட்டி உடைந்து போய் விட்டதாம். இங்கே ஒளிந்திருந்து இந்தக் கப்பலைக் கைப்பற்றிக் கொண்டார்கள். கடலோரத்தில் வழிகாட்டுவதற்கு எங்களையும் வருகிறீர்களா என்று கேட்டார்கள். பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று."

"அது எப்படி?"

"அந்தச் சோழகுலத்து இளநாகம் சோழ சேநாதிபதியுடன் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டோம். எப்படியும் சோழ நாட்டுக்கு அவன் திரும்பி வந்து சேர்வான் என்று அறிந்து கொண்டோம். அது மட்டுமல்ல, தம்பி! இலங்கையில் ஊமைப் பெண் பூதம் ஒன்று இருக்கிறது. அந்தப் பூதம் எங்கள் மந்திரத்துக்குப் பதில் மந்திரம் போட்டு அருள்மொழிவர்மனைக் காப்பாற்றிக் கொண்டிருந்தது. ஆனால் சோழ நாட்டுக்கு அது வராது"

வந்தியத்தேவன் அன்றிரவு அநுராதபுரத்தில் நடந்ததையெல்லாம் நினைத்துக் கொண்டான்.

ரவிதாஸன் திடீரென்று சிரித்தான். "இது என்ன சிரிப்பு? எதைக் கண்டு?" என்றான் வந்தியத்தேவன்.

"ஒன்றுமில்லை தம்பி! இந்த அரபு நாட்டாரின் சுபாவத்தை எண்ணினேன் சிரிப்பு வந்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## நேர்மை



(நேற்றைய தொடர்ச்சி)

நான் அதை ஏற்கப் போகிறேன், என்றான்.அதைக் கேட்டு ராமன் ஆச்சரியப்பட்டு, "உனக்கு எப்படி இந்த வேலை கிடைத்தது?" என்று கேட்டான்.

சோமனும், "நீ கண்டெடுத்த பணத்தில் எனக்கு பாதி பணத்தை கொடுத்தாயே நினைவில் இருக்கிறதா? அதோடு என் மனைவி கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து வைத்திருந்த இருபத்தைந்து ஆயிரத்தை சேர்த்து, நம் கிராம அதிகாரயிடம் கொடுத்து நடந்தைக் கூறினேன். மீதமுள்ள இருபத்தைந்து ஆயிரத்தை நானே சம்பாதித்து அவரிடம் கொடுத்து விடுவதாகவும் கூறினேன். அந்த அதிகாரியும் நான் சொன்னதை கேட்டு மகிழ்ந்து போனார்.

அவரும் விசாரித்து அந்த பணப்பை நம் ஊரில் காய்கறி வியாபாரம் செய்யும் நல்லசாமியின் பணம் என அறிந்து, அவனிடம் ஒப்படைத்து என்னைப் பற்றிச் சொன்னார். நல்லசாமிக்கு அரசாங்கப் பொக்கிஷ அதிகாரியைத் தெரியும்.

அரசாங்க பொக்கிஷத்தில் தினமும் லட்சம் ரூபாய்க்குக் குறையாமல் வரவு வந்து கொண்டே இருக்கு. அதற்குக் கணக்கு எழுதி நாணயமாய் காத்து வர ஒருவன் தேவை என அவர் நல்லசாமியிடம் கூறினார். நல்லசாமி என்னைப் பற்றியும், நான் நேர்மையுடன் பணத்தை கிராம அதிகாரியிடம் ஒப்படைத்ததை பற்றியும் விவரமாகக் கூறி என்னைச் சிபாரிசு செய்ததால் எனக்கு இந்த உத்தியோகம் கிடைத்தது," என்றான்.

"அப்படியானால் என்னை விட்டு விட்டு நீ மட்டும் பட்டணத்திற்குப் போகப் போகிறாயா?" என்று பெருமூச்சு விட்டவாறே கேட்டான் ராமன்.

சோமனும், "இல்லை உன்னையும் கூட்டிக் கொண்டு தான் போகப் போகிறேன். நல்லசாமியிடம் உன்னைப் பற்றிக் கூறி உன் ஏழ்மை தான் உன்னை ஆசை கொள்ளச் செய்கிறது என்றும், உன்னை அவனது வியாபாரத்தில் கூட்டாளியாகச் சேர்த்துக் கொள்ளும்படியும் கூறினேன். அவனும் அதற்கு சம்மதித்தான். எனவே, நீயும் என்னோடு கிளம்பு," என்றான்.

"சோமா! நேர்மையாக நடந்தால் நிச்சயம் நல்ல பலன் என்பதை உணர்ந்தேன். இனி உன்னைப் போலவே நானும் நடக்கிறேன்," என்றான் ராமன்.

இரு நண்பர்களும் பட்டணத்திற்குப் போய் தம் வேலைகளைச்செய்து கொண்டு சுகமாக வாழ்ந்தனர்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு நாட்டிற்கும், அதற்கே உரிய பாதை ஒன்று உண்டு ; அது போலவே உயிர்நாடியான லட்சியம் ஒன்று உள்ளது - சுவாமி விவேகானந்தர்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## தெளிந்த அரசியல் ஞானம் இல்லாத இனமாக நாம்...

டாக்டர் மு.வரதராசனார் மிகப்பெரும் அறிஞர். கள் பெற்ற பெருவாழ்வு என்ற கட்டுரையின் ஆசிரியர். திருக்குறளுக்கு எளிமையான பொருள் தந்த சமகாலத்து தமிழ் விற்பன்னர்.

அவர் தமிழ் இனம் தொடர்பில் ஆய்ந்தறிந்து மூன்று விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதில் தமிழர்களிடம் ஒற்றுமைக் குறைவு என்பது முக்கியமானது.

தவிர, காட்டிக் கொடுக்கின்ற கயமைத்தனமும் நம் இனத்துக்கு ஈனமாய் அமைந்துள்ளதென்பதையும் அவர் எடுத்துரைத்துள்ளார்.

உண்மை. டாக்டர் மு.வரதராசனார் இன்றில்லையாயினும் அவர் குறித்துரைத்த விடயங்கள் தொடர்பில் நாம் ஈண்டு கவனிப்பது கட்டாயமானதாகும்.

அவர் கூறிய விடயங்களைக் கடந்து, எங்கள் ஈழத் தமிழினம் பற்றி நாம் விசேட கவனம் செலுத்துவோமாயின் எங்களிடம் தெளிந்த அரசியல் ஞானம் இல்லை என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

உண்மை. தெளிந்த அரசியல் ஞானம் இல்லை என்று கூறும்போது, அதனை எந்த அரசியல் தரப்பும் தமக்கானதெனச் சொந்தம் கொண்டாட வேண்டியதில்லை.

மாறாக, நாம் இங்கு கூறுவது ஒட்டுமொத்தத் தமிழ் அரசியலையும் என்பது இங்கு குறித்துரைக்கப்பட வேண்டும்.

ஆம், சேர் பொன்.இராமநாதன் அவர்கள் தகைமை கொண்ட அரசியல் தலைவர். அவர் நினைத்திருந்தால், தமிழ் மக்களின் தாயகத்தை தனிமைப்படுத்தியிருக்க முடியும். ஆனால் அவர் அதைச் செய்யவில்லை.

அவ்வாறு சேர் பொன்.இராமநாதன் அவர்கள் அதைச் செய்யத் தவறியமைக்குக் காரணம்; சிங்களவர்கள் தொடர்ந்தும் தமிழ் மக்களுடன் ஒற்றுமையாகப் பயணிப்பர் என்பதாக இருந்திருக்கலாம்.

இங்குதான் கால அசைவில் ஏற்படக் கூடிய மாற்றங்கள் தொடர்பில் சேர் பொன். இராமநாதன் அவர்கள் இம்மியும் சிந்தித்தாரில்லை.

இதேபோன்றுதான் ஏனைய தமிழ் அரசியல் தலைவர்களும் இருந்துள்ளனர்.

இதில் ஒரு சில தமிழ் அரசியல் தலைவர்கள் யதார்த்தத்தை உணர்ந்து செயற்பட முற்பட்டனராயினும் அவர்களின் தூரநோக்கும் அரசியல் ஞானமும் அறியாமை என்ற இருளுக்குள் மூழ்கிக் கிடந்தவர்களால் வெறுக்கப்பட்டது என்பதும் உண்மை.

நிலைமை இதுவாக இருக்கையில், உள்ளகப் பொறிமுறை மூலம் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காதென பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அவர்கள் கூறியுள்ளார்.

இவ்வாறு அவர் கூறுவதற்குச் சான்றாதாரத்தை முன்வைத்துள்ளார்.

அதாவது, யுத்தம் முடிந்து 15 வருடங்கள் ஆகியபோதிலும் இன்னமும் நீதி நிலைநாட்டப்படவில்லை.

எனவே உள்ளகப் பொறிமுறை மூலம் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காதென்பது உறுதியாகியுள்ளது என அவர் தான் கூறிய கருத்தை வலுப்படுத்தியுள்ளார்.

இங்கு நாம் கூறுவது; யுத்தம் முடிந்த உடனேயே உள்ளகப் பொறிமுறை மூலம் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது என்ற கருத்தை நம்மவர் பலர் முன்வைத்தனர்.

இருந்தும் அந்தக் கருத்தை கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா.சம்பந்தர் கிஞ்சித்தும் கருத்திலெடுக்கவில்லை எனும் போதுதான், எங்கள் அரசியல் தலைவர்கள் தெளிந்த அரசியல் ஞானம் இல்லாதவர்களாக இருக்கின்றனர் என்பது இங்கு உறுதி செய்யப்படுகிறது.

## ஒரு கோடியே எழுபது இலட்சம் பேர் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி

(கொழும்பு)

2024ஆம் ஆண்டிற்கான ஜனாதிபதித் தேர்தலில் சுமார் ஒரு கோடியே எழுபது இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றிருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த தொகையில் 18 வயதை பூர்த்திசெய்த 10 இலட்சம் புதிய வாக்காளர்கள் உள்ளடங்குவதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான அடிப்படை ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளதாகவும் ஜனாதிபதி தேர்தலுக்கு ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்திற்கான வாக்காளர் பதிவேடுகள் தயாரிப்பது தொடர்பான நடவடிக்கைகளை இன்று தொடக்கம் ஆரம்பித்துள்ளதாகவும் வாக்காளர் பதிவேடு தயாரிக்கும் நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவடைவதாகவும் தேர்தல் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

இதன்படி, வாக்களிக்க தகுதி இருந்தும் வாக்காளர் பதிவேட்டில் பெயர் சேர்க்கப்படாத நபர்கள், தங்களின் பெயர்களை உரிய பட்டியலில் சேர்க்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## கொரோனா சூழ்நிலையால் பணிக்கு திரும்ப தவறிய அரச அதிகாரிகளுக்கான புதிய சுற்றறிக்கை வெளியீடு

(கொழும்பு)

கொரோனாத் தொற்று நோய்களின் போது வெளிநாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக பணிக்குத் திரும்பத் தவறிய அரசாங்க அதிகாரிகளின் விடுமுறைக்கு ஒப்புதல் வழங்குவது தொடர்பான புதிய சுற்றறிக்கை அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

அரச நிர்வாகம் உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அது தொடர்பான சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த சுற்றறிக்கை அனைத்து அமைச்சின் செயலாளர்கள் மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு கொரோனா தொற்று நோய் நிலைமை காரணமாக வெளிநாட்டில் இருந்து உரிய திகதியில் பணிக்கு திரும்பத் தவறிய அரச அதிகாரிகளின் விடுப்பு தொடர்பாக இவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி முறையான விடுமுறை அனுமதியின்றி பணிக்கு சமூகமளிக்காத அனைத்து அரச அதிகாரிகளுக்கும் இராஜினாமா அறிவிப்பை வெளியிடுமாறும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (நி)

## யாழ்.மாநகர சபையின் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நாளை மறுதினம் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடமாடும் சேவை இல66, கஸ்தூரி வீதி, நீராவியடியில் அமைந்துள்ள சைவ பரிபாலசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

2, 8, 9 ஆம் வட்டாரங்களிற்கான ஆதன வரி அறிவித்தல்கள் விநியோகித்தல், பெயர் மாற்ற விண்ணப்ப படிவம் வழங்குதல், துவிச்சக்கர வண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைக்களைப் பெற்றுக் கொள்வதுடன் அனைத்து வட்டாரங்களினதும் இதுவரை காலமும் செலுத்த வேண்டியுள்ள ஆதன வரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி, தண்ணீர்க் கட்டணம் மற்றும் வியாபார வரி போன்றவற்றை செலுத்த முடியும் என யாழ். மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி)

## தமிழ் பொது வேட்பாளர் தேவையற்ற ஒன்று-வஜிர

(கொழும்பு)

தமிழ் அரசியல்வாதிகள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை களமிறக்கினாலும் தமிழ் மக்களின் வாக்குகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கே கிடைக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் மக்கள் விரும்புகின்ற தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திகழ்கின்றார்.

இந்நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் போட்டியிடுகின்ற நிலையில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஏன் வேண்டும்? இந்த விடயத்தில் வடக்கு தமிழ் அரசியல் வாதிகள் ஏன் அதிக கவனம் செலுத்துகின்றார்கள்? எனவும் கேள்வியெழுப்பினார்.

அதேவேளை, நடக்கக் கூடிய விடயங்கள் தொடர்பில் வடக்கு தமிழ் அரசியல்வாதிகள் கவனம் செலுத்த வேண்டும்.

அதைவிடுத்து மக்கள் விரும்பாத சாத்தியம் இல்லாத விடயங்கள் தொடர்பில் பேசி காலத்தை வீணடிக்கக்கூடாது.

அந்தவகையில், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் தேவையற்ற ஒன்று.

தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பில் வடக்கு தமிழ் அரசியல்வாதிகள் என்ன தீர்மானம் எடுத்தாலும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கே தமிழ் மக்கள் ஆதரவு வழங்குவார்கள் எனவும் தெரிவித்தார். (நி)

## வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதிய மோ.சைக்கிள்

### படுகாயமடைந்த பெண் மருத்துவமனையில்

(கரணவாய்)

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் பெண் ஒருவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை முற்பகல் பருத்தித்துறை- மருதங்கேணி வீதியில் குடத்தனை வலிக்கண்டிப் பகுதியில் இடம்பெற்ற இவ்விபத்தில் இந்திரராஜா சிந்துஜா (வயது- 27) என்பவரே பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி-60)

## மோட்டார் சைக்கிள் விபத்து ஒருவர் படுகாயம்

(கரணவாய்)

கட்டைக்காடு முள்ளியான் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் கட்டைக்காடு, முள்ளியானைச் சேர்ந்த அன்ரன் யோகநாதன் றோகான் (வயது- 37) என்பவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி-60)

## ஹெரோயினுடன் இளைஞன் கைது

(கரணவாய்)

ஹெரோயின் போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த இளைஞர் ஒருவர் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 9. 20 மணியளவில் பருத்தித்துறை பொலிஸார் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது புலோலி, சாரையடிப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் இளைஞன் ஒருவன் நிற்பதை அவதானித்து அவரை சோதனையிட்ட போது அவரது உடமையில் இருந்து 2100 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது.

இதனை அடுத்து 20 வயதுடைய இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சிப் பலன்கள் 01.05.2024-13.04.2025



**புதனை ராசிநாதனாகக் கொண்ட கன்னி ராசி அன்பர்களே!**

நீங்கள் புத்திக்கூர்மை கொண்டவர்கள். கிரகநிலை - அஷ்டம ஆயுள் ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். உங்களது ராசி ஸ்தானம் - தைரிய ஸ்தானம் - பஞ்சம பூர்வ புண்ணிய ஸ்தானம் ஆகியவற்றைப் பார்க்கிறார்.

**மேஷத்தில் இருந்து ரிஷபத்துக்கு:** நிகழும் மங்களகரமான ஸ்வஸ்தி ஶ்ரீகுரோதி வருஷம் உத்தராயணம் வஸந்த ரிது சித்திரை மாதம் 18 ஆம் நாள் இதற்குச் சரியான ஆங்கிலத்திகதி 01.05.2024 அன்றைய தினம் கிருஷ்ணபக்ஷ அஷ்டமியும் - புதன்கிழமையும் - திருவோண நட்சத்திரமும் - சுப நாமயோகமும் - பவ கரணமும் - சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் மாலை 05.01 இற்கு துலாம் லக்னத்தில் குரு

கொள்ளும் நிலைமை உருவாகும். உடல் ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் ஏற்படாது. யோகா, பிராணாயாமம் போன்றவற்றைச் செய்து உடல் நலத்தையும், மனவளத்தையும் பெருக்கிக் கொள்வீர்கள்.

செய்தொழிலில் படிப்படியான வளர்ச்சி ஏற்பட்டு பொருளாதார நிலை உயரும். போட்டியாளர்கள் பின்வாங்குவார்கள். அரசு வகையில் சில சலுகைகள் தேடி வரும். மனதில் ஏற்பட்ட இனம் புரியாத வேதனைகளும், பயங்களும் முற்றிலும் நீங்கிவிடும். உங்களுக்கு கீழ் பணிபுரிபவர்களின் குறைகளைக் கண்டறிந்து தயவுதாட்சண்யமின்றி திருத்துவீர்கள். உங்களின் செயல்களுக்கு நண்பர்கள், கூட்டாளிகளிடம் வரவேற்பு கிடைக்கும். பெரியோரைத் தேடிச் சென்று அவர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். நேர் வழியில் செயற்பட்டு வெற்றி பெறுவீர்கள். எதிர்பார்த்த அளவுக்கு வருமானம் கிடைக்கும். உங்களின் முடிவுகளை பயமின்றி செயற்படுத்துவீர்கள்.

குடும்பத்தினரை அனுசரித்து நடந்து கொள்வீர்கள். போட்டியாளர்கள் உங்களை ஏமாற்ற முடியாது. உங்களின் நெடுநாளைய ஆசை ஒன்று இந்தக் காலகட்டத்தில் பூர்த்தியாகும். உங்களின் தெளிந்த சிந்தனைகளால் பிறருக்கு தகுந்த அறிவுரைகளை வழங்குவீர்கள். உங்களைச் சார்ந்தவர்களுக்கு தன்னம்பிக்கை அளிப்பீர்கள். வெளிநாடு விசா குறித்த சந்தேகத்தில் இருந்தவர்களுக்கு ஆச்சரியப்படும் வகையில் விசா கிடைத்துவிடும். காணாமல் போயிருந்த பொருட்கள் மீண்

ப்பிப்பீர்கள். உங்களுக்குக் கீழ் பணிபுரிபவர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்குவீர்கள்.

அரசியல்வாதிகள் மேலிடத்தின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். கட்சித் தொண்டர்களின் ஆதரவு நன்றாக இருக்கும். எவரையும் பகைத்துக்கொள்ளாமல் உங்கள் செயல்களைச் செய்து நற்பெயர் வாங்குவீர்கள். உங்கள் பேச்சுக்கு மதிப்பு உயரும். கலைத்துறையினருக்கு வாய்ப்புகள் குவியத் தொடங்கும். எனவே வாய்ப்புகளை நன்கு ஆராய்ந்து தேர்வு செய்ய வேண்டிவரும். சக கலைஞர்களின் உதவிகளை




யும் பாராட்டுகளையும் பெறுவீர்கள். எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும்.

பெண்மணிகளின் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேறும். திருமணம் தடைபட்டவர்களுக்கு இந்தக் காலகட்டத்தில் திருமணம் நடக்கும். உத்தியோகமும் கிடைக்கும். புனிதப் பயணங்களை மேற்கொள்வீர்கள். குடும்பத்தில் முன்னேற்றம் ஏற்படும். முக்கியப் பிரச்சினைகளில் மௌனம் சாதித்து பிரச்சினைகள் பெரிதா

நீங்கும். குழந்தைகளின் செயல்களால் பெருமை அடைவீர்கள். உங்களை நாடி வருபவர்களுக்கு தேவையான உதவிகளை செய்வீர்கள்.

**அஸ்தம்:** இந்த பெயர்ச்சியால் திடீர் செலவு உண்டாகலாம். ஆன்மீகத்தில் ஈடுபாடு காட்டுவது உங்களுக்கு மன நிம்மதி ஏற்படுத்தித் தரும். பகீரதப் பிரயத்தனம் செய்வதன் மூலமாகவே நல்ல முன்னேற்றம் ஏற்படும். சிறிது முயற்சி செய்வதன் மூலம் சிறந்த வாய்ப்புகள் கைகூடும். மேலும் உங்கள் கௌரவம் அதிகரிக்கும். புதிய திட்டங்களை செயற்படுத்திக் கொள்ள சிறப்பான சந்தர்ப்பம் அமையும். சக வியாபாரிகளுடன் ஒத்துப் போவீர்கள். பெரிய கடன்களிலிருந்து விடுபடவும் வழி கிடைக்கும். உற்பத்தி சார்ந்த தொழிற்துறையாளர்களுக்கு தொய்வு இன்றி தொழில் நடைபெறும்.

**சித்திரை - 1, 2 பாதங்கள்:** இந்த குருப்பெயர்ச்சியால் வீட்டைவிட்டு வெளியே தங்கநேரிடலாம். பதவிகளில் முன்னேற்றம் உண்டாகும் காலமிது. கடின உழைப்பும், புத்திசாதுர்யமும் பதவி முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். நஷ்டம் உண்டாக வாய்ப்புகள் உண்டு. உங்கள் சமயோஜித புத்திக் கூர்மையால் திடீரென்று வரும் பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். சக ஊழியர்களுடன் கவனமாகப்பழகுவது நல்லது. ஆனாலும் பணம் சம்பந்தமான விடயங்களில் கவனத்துடன் செயற்படுவது நன்மை தரும். எந்த ஒரு வேலையையும் மிகவும் பொறுமையாகவும், பொறுப்புடனும் செய்து முடிப்பது அவசியம். எல்லா காரியங்களும் அனுகூலமாக நடந்து முடியும். முக்கிய நபர்களின் உதவி கிடைக்கும்.

**பரிகாரம்:** அருகிலிருக்கும் ஐயப்பன் ஆலயத்திற்கு சென்று வணங்குவது பாவங்களை போக்கும். சிக்கலான பிரச்சினைகள் தீரும். கடன் பிரச்சினை கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் :

**சிறப்பு பரிகாரம்:** சர்க்கரைப் பொங்கல் செய்து புதன்கிழமைகளில் ஏதேனும் ஒரு ஆலயத்தில் விநியோகம் செய்யவும் ; **சொல்ல வேண்டிய மந்திரம்:** "ஓம் ஶ்ரீசாஸ்தாய நம" என்ற மந்திரத்தை தினமும் 5 முறை சொல்லவும் ;

**அதிஷ்ட எண்கள்:** 2, 5, 6, 9 ;

**அதிஷ்ட ஹோரைகள்:** சந்திரன், செவ்வாய், குரு, சுக்கிரன் ;

**அதிஷ்ட திசைகள்:** கிழக்கு, வடக்கு ;

**அதிஷ்ட கிழமைகள்:** திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி

## பதவி உயர்வு கிடைக்கலாம்

பகவான் மேஷ ராசியிலிருந்து ரிஷப ராசிக்கு மாறுகிறார்.

**கன்னி ராசியினருக்கான குருப் பெயர்ச்சி பலன்கள்:** குரு பகவானால் உங்களின் வாக்கு வன்மையில் பிரச்சினை வரலாம். மற்றபடி உங்களின் ஆன்மீக சிந்தனைகள் மெருகேறும். புதிய ஆலயங்களைத் தேடிச் சென்று வழிபடுவீர்கள். குடும்பத்தின் வளர்ச்சியில் உங்களின் பங்களிப்பு பெருகும். உற்றார் உறவினர்களையும் நண்பர்களையும் அனுசரித்து நடந்துகொள்வீர்கள். அதே நேரம் எவரிடமும் அநாவசிய பேச்சு வேண்டாம். மற்றவர்களின் பேச்சுக்களையும், நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனித்து அதற்கேற்ப உங்களின் செயற்பாடுகளை வகுத்துக்கொள்ளவும். புதுப்புது ஆராய்ச்சிகளில் ஈடுபடுவீர்கள். திடீரென்று தொலைதூரப் பயணம் மேற்

டும் கை வந்து சேரும். குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்களுக்கு இந்தக் காலகட்டத்தில் புத்திர பாக்கியம் கிடைக்கும்.

உத்தியோகத்தர்கள் இந்த குருப் பெயர்ச்சியின் காரணத்தால் ஓரளவுக்கு முன்னேற்றம் காண்பார்கள். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சக ஊழியர்கள் தக்க சமயத்தில் உதவுவார்கள். அதேநேரம் வேலைப்பளு அதிகரிக்கும். எனவே பொறுப்புடனும், நிதானத்துடனும் நடந்து கொள்ளுங்கள். அலுவலக ரீதியான பயணங்களைச் செய்ய நேரிடும். வியாபாரிகளுக்கு தொடர்ச்சியான இலாபம் கிடைக்கும். அதிக முதலீடு செய்யாமல் வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். போட்டிகளை சாதுர்யத்துடன் சமாளிப்பீர்கள். மேலதிக வருமானத்தை எதிர்காலத்திற்காக சேமித்து வைப்பீர்கள். கணக்கு வழக்குகளை சரியாக வைத்துக்கொண்டு அரசாங்கத்திடம் சமர்

காமல் பார்த்துக் கொள்ளவும். மாணவமணிகள் படிப்பில் அலட்சியம் காட்டாமல், திட்டமிட்டபடி படித்து நல்ல மதிப்பெண்களைப் பெற முயற்சிக்கவும். மற்றபடி உங்கள் படிப்புக்கு அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்த்த மானியங்கள் கிடைக்கும்.

**உத்தரம் 2, 3, 4 பாதங்கள்:** இந்த குருப்பெயர்ச்சியால் தொழில் வியாபாரத்தில் இருந்த மந்தநிலை மாறும். விற்பனை அதிகரிக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் வேகம் காணப்படும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் புத்திசாதூரியத்தால் வேலைகளை திறமையாக செய்து முடித்து பாராட்டு பெறுவீர்கள். பதவி உயர்வு கிடைக்கலாம். குடும்பத்தில் நிம்மதி காணப்படும். விருந்து நிகழ்ச்சியில் குடும்பத்தினருடன் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை

(தொடரும்)

## இராசிபலன்

10.05.2024
சித்திரை 27, வெள்ளிக்கிழமை
துதியை காலை 6.27 மணிவரை

திருதியை பின்னிரவு 5.39 மணிவரை
ரோகினி பிற்பகல் 1.04 மணிவரை
சுபநேரம் 5.54-7.24 மணிவரை
இராகுகாலம் 10.24-11.54 மணிவரை

அட்ஷய திருதியை
சந்திராஷ்டமம் - அத்தம், சித்திரை

வளவன்




காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பணம் பற்றிய கவலை தீரும்.




எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், கௌரவமான நாள்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மறதியால் ஒரு சில பணிகளைச் செய்யாமல் விட்டுவிடுவீர்கள், உடல்நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.




விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் வாய்ப்புண்டு, வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும்.




இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வியாபார விரோதம் விலகும், உடல் நலன் சீராகும்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும், உறவினர்களின் சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.




உறவினர் வழியில் எதிர்பார்த்த நன்மைகள் நடைபெறலாம், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.




வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், முத்தான வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம்.

மதம் என்றால் அன்பும் சத்தியமும் அகிம்சையும் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீக்காயத்துக்...

கிழமை மாலை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது .

இதில் அதே இடத்தைச் சேர்ந்த அன்ரன் மரியதாஸ் கிருபாகினி (வயது- 26) என்ற யுவதியே உயிரிழந்துள்ளார்.

குறித்த யுவதி மண்ணெண்ணெய் ஊற்றி தனக்குத்தானே தீ மூட்டியுள்ளார்.

இம் மரணம் தொடர்பில் வல்வெட்டித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி சுசீந்திரசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,60)

## அதிகளவு...

சிவஞானம் ஜெயக்குமார் என்பவரே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினர், நேற்று முன்தினம் மனைவியின் தந்தையின் நினைவு நிகழ்வுக்கு சென்றுள்ளனர். மதியம் 1.30 அளவில் குறித்த நபர் வீட்டு வளவில் சிறுநீர் கழிக்க சென்ற போது, மல்லாக்காக விழுந்து விட்டார்.

அவரால் எழ முடியவில்லை. சூரிய ஒளி அவரில் நேரில் பட்டுக் கொண்டிருந்துள்ளது. அதிக வெப்பத்தால் ஹீட் ஸ்ரோக்ஏற்பட்டு அவர் உயிரிழந்துள்ளார்.

மாலை 4.30 மணியளவில் பிள்ளைகள் வீடு திரும்பியபோது, தந்தை நிலத்தில் விழுந்திருந்ததை அவதானித்து, அவரை தூக்க முயன்றபோது உடல் அனலாக தகித்ததாகவும், அவரது தோல்கள் உரிந்து வந்ததாகவும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டதோடு பிரேதப் பரிசோதனைக்கும் உத்தரவிட்டார்.

அதற்கமைய அவரது உடல் நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்குட் படுத்தப்பட்டது. அதிக வெப்பத்தால் ஹீட் ஸ்ரோக் ஏற்பட்டு உயிரிழந்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அவரது உடலில் 10 வரையான எரிகாயங்களும் காணப்பட்டன. (ம-7,10)

## மாதம் 10 கிலோ...

அரிசியை இலவசமாக வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தீர்மானத்திற்கமைய இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

அதேவேளை அண்மைக்காலமாக அரசாங்கத்தினால் இலவசமாக விநியோகிக்கப்படும் அரிசி தரமற்றது எனவும், அவை பணத்திற்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

இந்த நிலையில் குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுக்குமாறு மாவட்ட செயலாளர்களுக்கு பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் பணிப்புரை விடுத்துள்ளார். (ம-7,10)

## உக்ரைன்...

பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி நிஹால்தல்துவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,10)

## கந்தர்மடம்...

களைச் சேர்ந்த 23, 28 வயதுடைய இரு பெண்கள், கோப்பாயைச் சேர்ந்த 24 வயதான இளைஞன் மற்றும் வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சில நாட்களாக குறித்த வீட்டில் அதிகளவு பெண்கள் மற்றும் ஆண்கள் வந்து போவதாக யாழ்.மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு அந்தப் பகுதி ஊரமக்களினால் தகவல் வழங்கபட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று வீட்டை முற்றுகையிட்டவேளை இரு பெண்களும் ஆண் ஒருவரும் மற்றும் வீட்டின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை மற்றொருவர் பொலிஸார் வருவதைக் கண்டு மதில் பாய்ந்து தப்பிச் சென்றுள்ளார். தப்பிச் சென்றவருடையதாகக் கருதப்படும் கைத்தொலைபேசியை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. (ம-7,10,33)

## ஜனாதிபதித்...

கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறிப்பாக தேர்தல்கள் கண்காணிப்பு அமைப்பான பெவ்ரல் அமைப்பினால் விடுக்கப்பட்டுள்ள வேண்டுகோள்கள் தொடர்பான அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்னாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்பதாகவே அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்களின்போது முன்னெடுக்கப்படுகின்ற தேர்தல் பிரசாரங்கள் தொடர்பாக அவதானித்து வருவதாக பெவ்ரல் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களை ஜுலை மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும் அரசாங்கம் பணிப்புரை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## பாராளுமன்றை...

பெரமுன கட்சி விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார் என அறியமுடிகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் நடைபெற்றது.

இதன் போது மேற்படி யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது எனத் தெரிய வருகின்றது. அரசமைப்பின் பிரகாரம் முதலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் முடிவிலேயே ஜனாதிபதி இருக்கின்றார் எனவும் கூறப்படுகின்றது. (ம-7,10)

## சம்ப...

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி நேற்று ஆற்றிய விசேட உரையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஒருமித்த கருத்துடன் முன்னோக்கிச் சென்றால்தான் நாம் தலைதூக்க முடியும்.

தனிப்பட்ட இலக்குகளுக்குச் சென்றால் அது அழிவின் ஆரம்பமாக அமையும்.

அத்துடன் பொது இணக்கப்பாட்டிற்கு வருமாறு அழைத்து பாராளுமன்ற

உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். (ம-7,10)

## கிளிநொச்சியில்...

தற்போது வசித்து வருகிறார். பளையில் கணவரின் வீட்டில் தற்போது நளினி தங்கியுள்ளார். (ம-7,10)

## ஜனாதிபதித் தேர்தல்...

தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் செப்ரெம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் 16ஆம் திகதிக்கும் இடையில் ஜனாதிபதி தேர்தலை நடத்தவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அரசியலமைப்பு மற்றும் 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதி தெரிவு விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு, குறிப்பிட்ட காலத்திற்குள் வேட்புமனுக்கள் கோரப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ரத்னாயக்கவின் கையொப்பத்துடன் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ம-7,10)


மஹஜன சம்பத — திகதி 2024.05.09 — சீட்டிழுப்பு இலக்கம் 5470 — T 6 6 3 6 6 8
அத சம்பத — T 3 6 6 8 — சீட்டிழுப்பு இலக்கம் 45

தன நிதானய — திகதி 2024.05.09 — சீட்டிழுப்பு இலக்கம் 1500 — Q 21 56 62 68 Q — Double Chance 08600

மெகா பவர் — திகதி 09.05.2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1818 — F 07 24 26 44 70 — Double Chance 37851

லக்கி 7 VIP — திகதி 2024.05.09 — சீட்டிழுப்பு இலக்கம் 0296 — P 7 2 7 7 1 3 P

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3712 — சீட்டிழுப்பு திகதி 09.05.2024 — C 09 45 48 64 — C 26312

ஹந்தஹன HANDAHANA — சீட்டிழுப்பு திகதி 2024.05.09 — சீட்டிழுப்பு இலக்கம் 0779 — சிம்மம் 22 33 42 55 சிம்மம் — 66659 — 25

சுப்பர் மில்லியன் — 09.05.2024 — வெற்றி வாரம் 178 — மஞ்சள் — U 7 2 8 8 1 7 — 86851 — J — அடுத்த சுப்பர் ஜக்பொட் 21,959,784.00

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2444 — வர்ணம் பச்சை — 09.05.2024 — வியாழன் — 02 05 23 40 U — 99775 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,488,224.80

சனிதா — 2024.05.09 — வெற்றி வாரம் 4605 — சிவப்பு — 19 24 26 55 V — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,294,993.60 — 61725

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4156 — வர்ணம் கபிலம் — சீட்டிழுப்பு திகதி 2024.05.09 — தினம் வியாழக்கிழமை — 10 11 28 30 — மகரம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 8,133,896.40 — 647456

கப்ருக — R 39 27 40 59 68 — 1620 — 09.05.2024 — வியாழன் — 898737 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 521,720,485.40

அட கோடிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 2270 — 2024.05.09 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 111,833,276.80 — 03 15 37 69 V — 980934


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சுன்னாகம் மின்சார நிலைய வீதியில் 31 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி
- சுன்னாகம் நகரம் 1 Km
- ஒரு பரப்பின் விலை 15 இலட்சம் தொடக்கம் 20 இலட்சம் வரை உள்ளது.
- தரகர் தேவையில்லை.

(697)

**077 88 62 927**

## வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் 1 ஆம், 2 ஆம் மாடி 4000 சதுர அடி கொண்ட மேல் மாடி வாடகைக்கு உண்டு.

(C-0324)

**076 315 6470**

## SRI LANKA MEDICAL COUNCIL NOTICE - APPRENTICE PHARMACISTS

### தொழிற்பயிற்சி மருந்தாளர்களுக்கான அறிவிப்பு

SLMC 07/05/2024 முதல் ஒன்லைன் நேர்காணல் வாய்ப்புகள் திறக்கப்படும் என்று அறிவித்துள்ளது. எனவே விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை online மூலமாக சமர்ப்பிக்க வேண்டும். அனைத்து விண்ணப்பதாரர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட நேர்காணல் திகதியில் SLMC அலுவகைத்தில் சமூகமளிக்க வேண்டும். தொழிற்பயிற்சி மருந்தாளர்களுக்கான அடிப்படைத் தகுதி A/L விஞ்ஞானப் பிரிவில் இரசாயனவியல் பாடம் உட்பட மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும். யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரி பட்டப்படிப்பு 464, ஆஸ்பத்திரி வீதியில் மேற்படி மருந்தாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது. இந்த பயிற்சிக்கான விண்ணப்பப் படிவங்களும் இங்கு பெற்றுக்கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு நேரு சேர் 0773164251 என்ற இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

(C-0326)


## நரகத்தில் ...

பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை (09) விசேட உரையாற்றிய போது அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடினமான நேரத்தில் பொருளாதாரத்தையும் நாட்டையும் கட்டியெழுப்புவதற்கான சவாலை நான் ஏற்றுக்கொண்டேன். எந்த நிபந்தனையுமின்றி ஆட்சியை பொறுப்பேற்றிருந்தேன். அச்சமின்றி நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. இதன்படி, இந்த ஆண்டு பொருளாதார வளர்ச்சி மூன்று சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களும் பொருளாதார வளர்ச்சி தொடர்பான முன்னறிவிப்புகளை வெளியிட்டுள்ளன.

புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டிற்கு அனுப்பும் பணம் அதிகரித்துள்ளது. நாட்டின் பணவீக்கம் தற்போது 1.5 சதவீதமாக குறைந்துள்ளது.

அத்துடன், கடந்த ஆண்டு வட்டி விகிதங்களும் குறைக்கப்பட்டுள்ளன. அந்நிய செலாவணி கையிருப்பு ஐந்து பில்லியன் டொலர்களுக்கு மேல் அதிகரித்துள்ளது.

சவாலான, கடினமான அத்துடன் சரியான பாதையை பின்பற்றியதன் காரணமாகவே இந்த நிலையை அடைய முடிந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

நரகத்தில் வீழ்ந்த நாட்டை மீட்க முடியும் என்ற நம்பிக்கை தமக்கு இருந்ததாலேயே ஆட்சியை கைப்பற்றியதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7.10)


## மாப்பிள்ளை தேவை

- வட்டுக்கோட்டை, இந்து, கௌரவகுலம், 1984, புனர்பூசம், Business management, Divorce, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- மானிப்பாய் - பருத்தித்துறை, இந்து, கௌரவகுலம், 1994, சதயம், Graduate, கனடா பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- சாவகச்சேரி, இந்து, கௌரவகுலம், 1996, அனுசம், BBA, கனடா பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- கட்டுவன், இந்து, கௌரவகுலம், 1980, பரணி, Graduate, Divorce, Australia பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- வேலணை - புங்குடுதீவு, இந்து, கௌரவகுலம், 1992, பூரம், ACCA, Accountant, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- அச்சுவேலி, இந்து, கௌரவகுலம், 1992, திருவாதிரை, Graduate, Accountant, UK, பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- அல்வாய், இந்து, கௌரவகுலம், 1981, புனர்பூசம், Business Management, Accountant பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- சுண்டிக்குளி - சுன்னாகம், இந்து, கௌரவகுலம், 1986, பூரட்டாதி, MBBS Doctor, UK பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.
- சண்டிலிப்பாய் - மல்லாகம், இந்து, கௌரவகுலம், 1995, பூரம், Graduate, Swiss பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை.

(708)

S.Sharma J.P Astrologer
- 077 539 3728
- 077 803 8193

## ஆங்கில வகுப்புகள்

அடிப்படையில் இருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு:

(699)

**077 666 5628**


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 . 11 . 1951

மறைவு 23 . 04 . 2023

செல்வச்சந்நிதி, தொண்டைமானாற்றை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் திரு. கந்தசாமி ஐயர் உலகுருநாதன் ஐயர்**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு நாளை 11.05.2024 சனிக்கிழமை மெத்தை வீட்டு கந்தசாமி ஐயர் மடத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

(0052)

செல்வச்சந்நிதி கோவிலடி,
தொண்டைமானாறு.

இங்ஙனம் :
குடும்பத்தினர்
077 321 7265


## விற்பனைக்கு

அலுவலக உபகரணங்கள் photo copier உட்பட உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

(699)

**070 3164 214**

## வேலை ஆட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான புடவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும்:-

- சிட்டை போடுபவர்
- விற்பனையாளர்
- காசாளர்(அனுபவம் உள்ளவர் ஆண், வயது 50 - 70)
- வரவேற்பாளர்

(709)

**076 962 4477**

## கொழும்பில் அறைகள், வீடு நாள் வாடகைக்கு

தெகிவளையில் காலி வீதி - PIZZA HUTக்கு முன்பாக குளிரூட்டப்பட்ட அறைகள் மற்றும் வீடுகள் சகல வசதிகளுடனும் நாள், மாத வாடகைக்கு விடப்படும்.

A/C Room - 6000/-இல் இருந்து
வீடு - 12000/-இல் இருந்து

(C-0337)

V2 GUEST 0743900360 0743900361

## V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

வீமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-0337)


## 25 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **வேலுப்பிள்ளை நாகலிங்கம்** (நாகராசா)

(ஓய்வு பெற்ற இலங்கை கடற்படையின் படைசாரா ஊழியர்)

திதி : அட்சய திருதியை 10.05.2024



காலனவனின் கையில் சிக்கி
கால் நூற்றாண்டு கடந்தாலும் – அப்பா,
காவியத்தலைவனாய் எம் இதயங்களில்
கணப் பொழுதும் வாழ்ந்து வருகின்றீர்கள் – அப்பா,

என்றும் உம் நினைவுகளுடன்

இல.52,
நொத்தாரிஸ் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்

தோற்றம் 16.02.1938

மறைவு 18.04.1999

(1500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிரைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.